



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 9, இதழ் - 2, மார்ச் - ஏப்ரல் 2023

**R5323**

## CONSIDER ONE ANOTHER
## ஒருவரையொருவர் கருத்தில் கொள்ளுங்கள்

ரோமர் 14:7-21

"மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்கு ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்." - ரோமர் 14:21

இந்த பாடம் மதுபானம் மற்றும் போதை பொருட்களிலிருந்து முற்றிலுமாக விலகியிருக்க வேண்டும் என்கிற வேதாகமத்தின் பலமான போதனையை காணபிக்கிறது. உண்மைதான், முழு புதிய ஏற்பாட்டில் உள்ளது போல கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே சொல்லப்படுகிறது. எனினும் இயேசுவின் சீஷர்களாக ஆகாதவர்கள் இந்த விவாதத்தை உணர்ந்து கொள்ளக்கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்தவர்களின் வழியில் அல்ல, பொன்னான கற்பனை வழியில் போதிக்கும்.

மனுக்குலம் அனைத்திற்குமாக ஒப்புக்கொள்ளப்பட்ட பொன்னான பிரமாணத்திற்கும் கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரமாணத்திற்கும் இடையே வித்தியாசமில்லாத மேன்மை அநேகரால் கவனிக்கப்படும். ஆனால் இது உண்மையில்லை. மற்றவர்கள் தனக்கு செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதை பிறருக்கு செய்ய வேண்டும் என்கிற பொன்னான பிரமாணம் நீதியின் சாதாரண பிரமாணமாக இருக்கிறது. எல்லாரும் இதை அங்கீகரிக்க வேண்டும். அனைவரும் இதை கடைபிடிக்க வேண்டும். யாரும் இதை மறுக்கமாட்டார்கள்.

ஆண்டவரால் போதிக்கப்பட்டு வாழ்ந்து காட்டப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரமாணம், சகல ஜனங்களுக்கும் பொருந்துகிற பொன்னான பிரமாணத்தைக் காட்டிலும் மிகவும் கடினமானதாக இருக்கிறது. கிறிஸ்துவின் சீஷர்களானவர்கள் நிச்சயமாக பொன்னான பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் தங்களை இன்னும் மிகவும் கடினமான பிரமாணத்துக்கு தானாக முன்வந்து கீழ்ப்படுத்துகிறார்கள். கர்த்தருடனான அவர்களது உடன்படிக்கை அவரது சித்தத்தை செய்வதாக, நீதியை செய்வதாக, எதையும் கொடுப்பதாக, தனது ஜீவனையும் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. அப்போஸ்தலர், கிறிஸ்து தமக்கே பிரியமாய் நடவாமல் என்று அறிவிக்கும்போது இதையே அர்த்தப்படுத்துகிறார். எனினும் அவரது சித்தம் பரிபூரணமான ஒன்றாக இருந்தது. மனுக்குலத்திற்கு ஊழியம் செய்வதற்காக தமது உரிமைகளையும், சலுகைகளையும், சுயாதீனங்களையும் அவர் கைவிட்டார். இப்படியாக நமது இனத்திற்கான பரம பிதாவின் மகிமையான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அஸ்திவாரத்தைப் போட்டார்.

சபையின் தற்கால அழைப்பு, "கிறிஸ்து இயேசுவிலிருந்த அதே சிந்தையை" உடையவர்களுக்கேயாகும். அது பலிகளுக்கான ஒரு அழைப்பாகும். பரிசுத்த பவுல் அறிவிக்கிறதாவது: "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12:1) இந்த பலியானது புத்தியீனமாகவோ அல்லது நோக்கமில்லாத வழியிலோ செய்யப்படக்கூடாது. நாம் துன்பப்படும்படியாக முறையானவைகளையும் சரியானவைகளையும் பலியிடக்கூடாது. முறையானவைகளையும் சரியானவைகளையும் நாம் அனுபவிக்கலாம். சுயத்தை வெறுப்பதற்கான சந்தர்ப்பங்களையும் சலுகைகளையும் காணும்படி தேவன் நம் கண்களைத் திறப்பார். அவரினிமித்தமும் கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களுக்கு கிருபையையும் சத்தியத்தையும் கொடுப்பதின் மூலம் ஊழியம் பண்ணவும் நம்மை சாத்தியப்படுத்துவார்.

### "நம்மில் ஒருவரும் தனக்கென்று பிழைக்கிறதில்லை"

முதலாவது நாம் அர்ப்பணம் செய்த தேவனுடைய ஜனங்களின் நிலைப்பாட்டில் நமது பாடத்தைக் கவனிப்போம். அதன்பிறகு கர்த்தருடனும் அவரது விசுவாசமுள்ள, சுயபலி செய்யும் கூட்டத்தில் சேராமலிருந்து ஆனால் நீதியை சிநேகிக்கிறவர்களின் நிலைப்பாட்டில் கவனிப்போம்.

உலகத்தாரைப் பொருத்தவரையில், அவர்கள் தங்களுக்காகவே வாழ்ந்து, தங்களுக்காகவே மரிக்கிறார்கள். அதாவது அவர்களது சொந்த விருப்பங்களே முதலாவது அவர்களுக்கு நிற்கிறது. இந்த வார்த்தைகள் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் மட்டுமே பிரயோகிக்கத்தக்கதாக இருக்கிறது. உயிர்த்தெழுதலின் வருங்காலத்தில் ஒரு ஆவிக்குரிய வாழ்க்கையில் வாக்குத்தத்தத்திற்கு மாற்றாக தற்கால சகல சலுகைகளையும் விருப்பங்களையும் விட்டுக்கொடுத்து சுயத்தை வெறுத்தல் என்கிற ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்திருக்கிறவர்களைத் தவிர வேறு யாருக்கும் இது பிரயோகிக்கத்தக்கதல்ல.

இவர்கள் அனைவரும் தங்களது உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி கர்த்தருக்குள் வாழவும், தங்களது சித்தத்தின்படியல்ல, அவரது சித்தத்தின்படி செய்யவும், தனக்கே ஊழியம் செய்யாமல் அவருக்கு ஊழியம் செய்யவும், பாவத்திற்கு விரோதமாக ஒரு நல்ல போராட்டத்தை போராடி தங்களது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும். இவர்கள் அனைவரும் மரிக்கும் பொழுது கர்த்தருக்குள் மரிப்பார்கள். அதாவது அவர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக கருதப்படுவார்கள். அதன் ஒவ்வொரு அங்கமும், முழு சரீரமும் நிறைவடைந்து

திரைக்குப்பின்னால் மகிமையடைவதற்கு முன்னால் மாம்சத்தில் மரிக்க வேண்டும். ஆகையால் இவர்களுக்கே, "பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயி –ருக்கிறோம்" என்ற வசனம் பொருந்தும்.

இது உண்மையாக இருந்து கிறிஸ்தவன் வாழ்வதிலும் மரிப்பதிலும் அல்லது அவனது எந்த காரியத்திலும் சுயசித்தம் உடையவனாக இருக்க மாட்டான். சகலமும் முழுவதுமாக சபையின் மாபெரும் தலைவருக்கு வாக்குக்கொடுக்கப்பட்டு அர்ப்பணம் செய்யப்பட வேண்டும். எல்லாருக்குமான கிறிஸ்துவின் மரணம் மரித்தவர்களுக்கு மாத்திரமல்ல உயிரோடிருக்கிறவர்களுக்கும் பயன் அளிக்கக்கூடியது. அவரை அங்கீகரித்து அவரது ஊழியத்திற்காக முழுவதும் அர்ப்பணம் செய்தவர்கள் வாழ்விலும் மரணத்திலும் அவரை முழுவதுமாக நம்புவார்கள்.

கிறிஸ்துவின் சரீரமாக இருந்து சபையை அமைக்கக்கூடியவர்கள், அவர்கள் ஒருவரையொருவர் தீர்ப்பு செய்யாமல், அனைத்து நியாயத்தீர்ப்பும் அனைவரின் இரட்சகராகிய தலையானவருடையதாக இருக்கும் என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். சபையின் அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொருவரும் முடிவாக சபையின் தலையானவரின் ஆய்வுக்கு நிற்க வேண்டும். ஏனெனில் அவரது சரீரத்தில் நமது தற்கால அங்கத்துவம் திறமையை சோதித்தறியக் கூடியதாக இருக்கிறது. தற்போது தலையானவரின் மேலுள்ள விசுவாசம், உண்மைத்தன்மை முடிவாக நமக்கு திரைக்கு பின்னால் இருக்கும் சபையாகிய அவரது மகிமையின் சரீரத்தில் அங்கத்துவத்தையும் அவரது உடன் சுதந்தரராகவும் மணவாட்டியாகவும் இருக்கக்கூடிய தகுதியையும் கொண்டு வரும்.

பிறகு நாம் ஒருவருக்கொருவர் கண்டனம் செய்வதை தவிர்த்து, திருப்தியுடன் நல்ல வழியில் ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்த வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் தேவனிடம் அறிக்கை பண்ணும் என்று எழுதப்பட்டிருப்பதால், கிறிஸ்துவின் சபையின் அங்கங்களாக தேவனிடம் அல்லது அவரது பிரதிநிதியாக நமது கர்த்தரிடம் நமது கடைசியான கணக்கை இது நிரூபிக்கிறது.

### பிறகு, நம்மை நாமே நிதானித்தறிவோமாக

அர்ப்பணம் பண்ணப்பட்ட சரீரத்தின் சக அங்கங்களை கண்டிப்பதற்கு, தீர்ப்பிடுவதற்கு பதிலாக அவர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார். அவர்களது சோதனைகளையும், அவர்களது கஷ்டங்களையும், அவர்களது சுற்றுப்புற சூழலையும் அவர்களது பரம்பரை காரியங்களையும் நாம் அறியோம் என்பதை நாம் உணர வேண்டும். இது அனைத்து சகோதரர்கள் மேலும் நம்மை இரக்கம் உள்ளவர்களாக ஆக்க வேண்டும். நீதியின் நமது கருத்தான உணர்வும், நீதியின் மேல் நமது அன்பும், அக்கிரமத்தை நாம் வெறுத்தலும், சுய விமர்சனத்தை அப்பியாசப்படுத்துவதிலும், ஒரு சகோதரனை தடுக்கலுக்கான எதையும் செய்யாதிருத்தலும், ஒரு சகோதரனை அதைரியப்படுத்துவதற்கான எதையும் செய்யாதிருத்தலும் அல்லது கர்த்தர் எதிர்ப்பார்க்கிற கிரியை மற்றும் விசுவாசத்திலிருந்து விழச்செய்யாதிருத்தலிலும் ஜாக்கிரதையாக இருப்பதில் அதன் கொள்கை காணப்பட வேண்டும்.

சத்துருவுக்கு எதிராக போராடுவதைக் காட்டிலும் சுயத்துக்கு எதிராக போராடுவதில் என்ன ஆச்சரியமான ஒரு பாடமாக இது இருக்கிறது! மற்றவர்களது குறைபாடுகளை மிகவும் அக்கறையுடன் காண்கிற அவர்கள் தங்களது சொந்த பலவீனங்களுக்கு சாக்குபோக்கு சொல்லுவது எவ்வளவு சுலபமாக இருக்கிறது! இப்படிப்பட்ட மனோபாவம் உள்ள தம்முடைய ஜனங்களை எப்படி எச்சரிக்கிறார். "நீங்கள் மற்றவர்களை (ஒரு சகோதரனை) தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் (கர்த்தரால்) தீர்க்கப்படுவீர்கள்." (மத்தேயு 7:2)

நீங்கள் குறை கண்டுபிடிக்கிறவராக இருந்து, மற்றவர்களை முழு பூரண திட்ட அளவிற்கு அளக்க விரும்புகிறவர்களாக இருந்தால், நீங்கள் உயர்ந்த திட்ட அளவில் இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டு, உங்களை அதே அளவில் அளப்பதே சரியானது என்று அதே அளவில் அளப்பார். இரக்கம் உள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்பதை நாம் நினைவுகூருவோமானால், அதாவது கர்த்தர் அதற்கேற்றாற்போல் நம்மிடம் கருணை காட்டுவார் என்று நம்பி, நாம் மற்றவர்களிடம் மிகவும் இரக்கம் உள்ளவர்களாயும் நியாயந்தீர்ப்பதிலும் கண்டனம் செய்வதிலும் மிகவும் கருணை காட்டுவோமானால் நாம் அனைவரும் எவ்வளவு சந்தோஷமாக இருப்போம்! (யாக்கோபு 2:13)

கர்த்தர் இதில் ஒரு தாழ்ந்த திட்ட அளவை நிலைநாட்டவும், அவருடைய ஜனங்கள் தங்களது சொந்த பலவீனத்தையும் தோல்விகளையும் இன்னும் மற்றவர்களது காரியங்களையும் மிகவும் லேசாக நினைக்க வேண்டும் என்றும் விருப்பமில்லை. மாறாக, அவர் அன்பு, இரக்கம் மற்றும் தயவு ஆகியவைகளில் ஓர் உயர்ந்த திட்ட அளவை வைக்கிறார். தேவனுடைய பார்வையில் அன்பானது பிரதான காரியமாக இருக்கிறது. ஆகையால் அன்பு மற்றும் இரக்கத்தில் மிகவும் அபிவிருத்தி அடைந்தவர்களை, அவரது பார்வையில் முக்கியமானவைகளில் மிகவும் அபிவிருத்தி அடைந்தவர்களாகவும், அவரது மத்தியஸ்த ராஜ்யத்தில் ஒரு இடத்திற்கு மிகவும் முக்கியமானவர்களாகவும் மதிப்பார்.

### ஒரு பொருளும் தன்னில்தானே தீட்டுள்ளதல்ல

"ஒரு பொருளும் தன்னில்தானே தீட்டுள்ளதல்ல என்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்" என்று அப்போஸ்தலர் எழுதுகிறார். இங்கே அப்போஸ்தலர் இங்கே மனிதனையோ அல்லது ஆடையையோ அசுத்தமென்று குறிப்பிடாமல், யூதருக்கு தகுதியற்றதாக இருக்கக்கூடிய சடங்காச்சாரத்தில் அசுத்தமான உணவை குறிப்பிடுகிறார். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், யூதர்களுக்கு பன்றி, முயல், சிப்பிகள் முதலியான விலக்கப்பட்டவைகள். இந்த உணவுகள் அவர்களை தேவனுடைய பார்வையில் அசுத்தமுள்ளவர்களாக அல்லது தீயவர்களாக ஆக்கும் என்பதல்ல. ஏதேனின் விலக்கப்பட்ட கனி ஆதாம் ஏவாளுக்கு அதன்பிறகு அசுத்தமாக இருந்தது போல, தேவனிடம் யூதர்களின் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் சோதிப்பதற்காக இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அப்போஸ்தலரின் வாதம் என்னவென்றால், நியாயப்பிரமாணமானது உடன்படிக்கையைக் கைக்கொள்வதின் மூலம் நித்திய ஜீவனை அடைய முடியும் என்ற நம்பிக்கைக்கு மரித்து, கிறிஸ்துவுடன் இணைந்த யூதனை அதன்பிறகு நியாயப்பிரமாணம் கட்டுப்படுத்தாது

என்பதாகும். நியாயப்பிரமாணத்திற்கு கீழ் எப்பவும் இராத புறஜாதியான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போது அதன் கட்டுப்பாடுகள் அவனுக்கு பொருந்தாது.

இது பரந்த கருத்தில் சொல்லப்பட்டது. யாராவது பகுத்தறிவும் திறமையிருந்து, இதன் கருத்தை மாற்றி, சிந்தித்தால், இதைக்குறித்த அவரது சிந்தை அல்லது தீர்மானத்திற்கு அவரே பொறுப்பு என்று அப்போஸ்தலர் ஏற்றுக்கொள்ளுகிறார். உதாரணத்திற்கு ஒரு கிறிஸ்தவன், பன்றி மாம்சத்தை தவிர்ப்பது தனது கடமை என்று நினைத்தால், அந்த நினைப்பே கடமையாக அமைகிறது. ஏனெனில் அவனுக்கு மனசாட்சியை மீறுவது, அவன் தெரிந்தே, வேண்டுமென்றே பாவம் செய்ததாக பொருள்படும். ஏனெனில் அது தீங்கு விளைவிப்பதாக இல்லாதிருந்தாலும் அவன் தவறு என்று நினைத்ததை செய்தால் அது தவறானதாகும்.

ஆனால் இப்போது முடிவான விவாதம் வருகிறது. அப்போஸ்தலர் செய்ததைப் போல், ஒருவர் தனது சுயாதீனத்தை உணர்ந்து, அவனது மனசாட்சியின்படி சாப்பிட்டால் தனது மனசாட்சி மற்றும் தேவனுடைய பார்வையில் கண்டனத்துக்குரியதாக இருக்காது. ஆனால் சகோதரர் தனது சுயாதீனம் குறித்து இன்னும் இருளில் இருக்கிறார். அவரது மனசாட்சியை மீறும்படி வற்புறுத்தக்கூடாது. அறிவு மிகுந்த சகோதரன் மற்றவர்களுக்காக விட்டுக்கொடுக்க வேண்டும். மற்ற சகோதரன் தனது மனசாட்சியை மீறும்படி நாம் அவனை தூண்டாமல், நமது சுதந்தரத்தை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

சடங்காச்சாரப்படி அசுத்தமான மாமிசம் என்பதற்கான காரணம் முதலாவது அது விக்கிரகத்துக்கு படைக்கப்படுகிறது. ஆனால் இப்பொழுது கிறிஸ்தவர்களிடையே அந்த பிரச்சனை இல்லை. இதைப் பொருத்தவரை எல்லா இடங்களிலேயும் அறிவு பெருகியிருக்கிறது.

இந்த பாடத்திற்கான பிரயோகம் கிறிஸ்தவர்களுக்கு இன்னும் ஒரு வித்தியாசமான வழியில் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒரு சகோதரன் சிறு வயதிலிருந்தே பீர், மது முதலானவைகளை குடித்து பழகி, அவரைப் பொருத்தவரை எந்த தீங்கும் இல்லை என்பது அவரது மதிப்பீடு. ஆனால் சில சகோதரர்கள் அவரை விட சரீரப்பிரகாரமாகவும் மனத்தளவிலும் பலவீனமாக இருப்பவர்கள் அதை பயன்படுத்தினால் அவர்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இருக்காது. ஆனால் இதை பயன்படுத்தும் சகோதரன் மற்றவர்களை தூண்டும்படி பயன்படுத்தினால் அப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

சரீரபிரகாரமாகவும், மனதளவிலும் ஒழுக்க நீதியிலும் பலமுள்ளவராயிருப்பவர் அவரது சகோதரனோ அல்லது தனது செல்வாக்கை பயன்படுத்துகிறவரோ இடறலடையும் படியாக எதையும் செய்யாதிருக்க வேண்டும் என்று அப்போஸ்தலருடைய வாதம் காணப்படுகிறது. "அவனை உன் போஜனத்தினால் கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே." (ரோமர் 14:15) கிறிஸ்து தமது பரலோக ஐசுவரியத்தையும் மகிமையையும் விட்டு, பாவிகளுக்காக மரித்து, உலகத்தில் இவ்வளவாய் அன்பு கூர்ந்தாரானால், அப்போஸ்தலர் வேறு இடத்தில் நமக்கு அறிவுறுத்துவது போல, கிறிஸ்துவின் ஆவியை பெற்றிருக்கிற நாமும் சகோதரருக்காக ஜீவனை கொடுப்பதில் நாம் சந்தோஷப்பட வேண்டாமா? நமது பலவீனமுள்ள சகோதரனுக்காக அற்பமான சுதந்தரங்களை பயன்படுத்தவதிலிருந்து விலகியிருக்க நாம் தயாராயிருக்க வேண்டாமா, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே? இதுதான் பலமான விவாதம். யார் இதை மறுக்கக்கூடும்?

"உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்." உங்கள் சுதந்தரங்களைப் பற்றிய உங்கள் அறிவும் உங்கள் மதிப்பும் நன்மையான காரியம், விரும்பக்கூடிய காரியம் தான். எனினும் உங்கள் சுதந்தரத்தை அப்பியாசப்படுத்தும் போது உங்களை தவறாக புரிந்து கொள்ளாதபடியும் நீங்கள் தீமை செய்பவர் என்று நினைக்காதபடிக்கும் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் சுதந்தரங்களை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். மற்றவர்கள் பார்வையில் தீமை என்று தோன்றுகிறவைகளிலிருந்து உண்மையாக தவிர்த்து, உங்கள் சொந்த செல்வாக்கை அதிகரித்து, மற்றவர்களை மிகவும் கடினமானவைகளுக்கு தூண்டுதலிலிருந்து காத்துக்கொள்ளுங்கள். அது உன்னுடைய பார்வையில் சரியானதாகவும், இந்த விஷயத்தில் தேவனுடைய பிரமாணம் உன்னுடைய தீர்மானத்தில் சரியானதாகவும் இருக்கலாம்.

## "புசிப்பும் குடிப்புமல்ல"

அப்போஸ்தலர் இன்னொரு வாதத்தை சேர்க்கிறார். (வசனம் 17) அதாவது நாம் அங்கமாக இருக்கக்கூடிய ஒரு நிலையில் உள்ள ராஜ்யத்தில் நமது அனுகூலம் பற்றி அவர் குறிப்பிடுவது, அதில் நமது சுதந்தரம் மற்றும் சலுகைகள் புசிப்பும் குடிப்புமல்ல என்பதாகும். ஆனால் அது பரிசுத்த ஆவியினால் உண்டான சந்தோஷமும் சமாதானமும் என்று கூறுகிறார். ஏனெனில் இந்த ராஜ்ய வகுப்பில் தகுதி காணும் அங்கமாக இருக்கிறோம். இப்படியாக கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர் தேவனுக்கு மிகவும் பிரியமாகவும் மனிதர்களால் அங்கீகரிக்கப்படுகிறவருமாக இருக்கிறார். "ஆனபடியால் சமாதானத்திற்கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே. எந்த பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான்; ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாக இருக்கும். மாம்சம் புசிப்பதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும் இடறுதற்கு ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்."

உலகமானது பொன்னான கற்பனையை அப்பியாசப்படுத்தினால் தற்கால அநேக கேள்விகளுக்கு அது தீர்வாக இருக்கும். நீ பலவீனமுள்ளவனாகவும் அவர்கள் பலமுள்ளவர்களாகவும் இருக்கும்போது, அவர்கள் உணர்விலும் எடுத்துக்காட்டிலும் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறாயோ, அதையே உன்னைவிட பலவீனமுள்ளவர்களுக்கு உணர்விலும் எடுத்துக்காட்டிலும் செய்வாயாக.

R5316

## QUESTION ON JUSTIFICATION

# நீதிமானாக்கப்படுதல் பற்றி கேள்வி

**கேள்வி :** சபையின் நீதிமான்களாக்கப்படுதல் பற்றிய உங்கள் கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறீர்களா? அதனால் வேதாகம பாடங்கள் தொகுதி 1 இல் இந்த தலைப்பு பற்றிய கருத்து இனி உங்கள் கருத்தை குறிக்காதா?

**பதில்:** நிச்சயமாக இல்லை! அப்படியிருந்தால் நாங்கள் ஏன் தொடர்ந்து பிரசுரித்து விநியோகித்து வருகிறோம். “நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.” ஆகையால் நமது நீதிமானாக்கப்படுதலைப் பற்றிய பாடம் கர்த்தரின் பிரியமான ஜனங்களில் அநேகரை அனுதினமும் தெளிவுப்படுத்திக் கொண்டிருக்கிறது. முன்பு நீதிமானாக்கப்படுதல் பற்றிய அம்சங்களை பகுத்துணராதிருந்தார்கள். இப்போது தெளிவடைந்திருக்கிறார்கள். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் படிப்படியான செயல்பாடு என்பதை கடந்த காலத்தில் அறியாதிருந்தார்கள். சிலர் இன்னும் அறியாதிருக்கிறார்கள். விசுவாசத்தின் ஒவ்வொரு படியும் உச்சத்தின் அருகே நம்மை கொண்டு வருகிறது.

ஆனால் நமது விசுவாசம், நமது கீழ்ப்படிதலினாலும், கர்த்தரிடத்தில் முழுமையான அர்ப்பணத்தினாலும் வெளிப்படுத்தப்படும் வரை முழுமையாக உச்சத்தை அடையமுடியாது. பிறகு நமது மாபெரும் பரிகாரி அர்ப்பணிக்கப்பட்ட நமது சரீரங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றை தமது புண்ணியத்தினால் சாட்டுதல் செய்து, நீதியின் பார்வையில் அவற்றை முழுமையாக நீதிப்படுத்தினார். பிறகு அது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, பரம பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு முழுமையாக நீதிமானாக்கப்பட்ட ஆத்துமாவாக இருந்தது. ஆகையால் அவன் ஒரு புதுசிருஷ்டி, ஆவியின் தளத்திற்கு ஜெனிப்பிக்கப்பட்ட ஒரு பிள்ளை.

விசுவாசத்தில் முன்னேறும் காலத்தில், நீதிமானாக்கப்படுதல் படிப்படியாக அணுகப்பட்டு, தனிப்பட்டவர், தெய்வீக கிருபையை அதிகமதிகமாக பெற்றார்கள். அவர் மானிட தளத்தில் ஒரு புத்திரனாக மனித சுபாவத்தில் முழுமையாக நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்கு வரும்வரை, கடைசி படிக்கு செல்லும் வரை இது நடைபெறாது. ஒரு கணப்பொழுது மட்டுமே அவர் அங்கே நிலைத்திருந்தார். பிறகு பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல், பூரணமாக்கப்பட்டவரின் பலியை ஏற்றுக்கொண்டு அவரை ஒரு புது சிருஷ்டியாக்க ஆரம்பித்தது.

### தற்காலிக மற்றும் உண்மையான மகன்

இவையெல்லாம் யுகங்களின் படத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தளம் அதன் பல்வேறு படிகளில் நீதிமானாக்கப்பட்ட நிலைமையை குறிக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆபிரகாம் மற்றும் மற்றவர்களும் அவர்களது விசுவாசத்தினால் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட்டார்கள். ஜீவனுக்கு அவர்கள் நீதிமான்களாக்கப்படவில்லை.குமாரத்துவத்துக்குக்கூட நீதிமானாக்கப்படவில்லை. அவர்கள் தேவனுடைய நட்புக்கும் அவரது கிருபை மற்றும் மேற்பார்வையான பராமரிப்புக்கும் நீதிமான்களாக்கப்பட்டார்கள். இயேசு மரித்து, உயிர்த்து, பரலோகத்திற்கு எழுந்தருளி, அவரது புண்ணியத்தை சபையின் சார்பாக சாட்டுதல் பண்ணின பிறகு, முழு அர்ப்பணத்தில் அவரது அடிச்சுவட்டில் நடக்க விரும்புகிற சகல வகுப்பாருக்கும் அவர் பரிகாரியானார். அவரது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணின ஒவ்வொருவருக்கும் நீதிமானாக்குதலின் வேலையை அமைக்கிறது. இது அவரது பலியை ஏற்று, புது சுபாவத்திற்கு அவரை ஜெனிப்பிக்கவும் தேவனுக்கு சாத்தியப்படுத்துகிறது.

ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டார். ஏனெனில் அவரது விசுவாசமும் விருப்பமும் தேவனுக்கு இசைவாக இருந்தது. யோவான் ஸ்நானனைப்பற்றி நாம் வாசிப்பதாவது: “மணவாளனுடைய தோழனோ... மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்.” “ஊழியக்காரன்” என்ற வார்த்தை வேதாகமத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழிருந்த யூதர்களுக்கு விசேஷமாக பயன்படுத்தப்பட்டது. அந்த உடன்படிக்கையினால் தேவனுடைய பராமரிப்பையும் ஆசீர்வாதத்தையும் அனுபவித்தார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய நண்பர்களாக இருக்கும்படி அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களில் அநேகர், ஆபிரகாமும் கூட தேவனுடைய நண்பர்களாக இருந்து, குமாரனுக்குரிய சகல உரிமைகளையும் பெற தகுதியுள்ளவர்களாக இருந்தும் கூட, தெய்வீக திட்டத்திற்கிசைவாக, அவர்கள் தேவனுடைய குமாரர்களாக அங்கீகரிக்கப்பட முடியாதிருந்தார்கள். அப்போஸ்தலர் கூறுவது போல, “குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்.” கிறிஸ்துவின் பலி, பாவம் மற்றும் மரணத்தை நீக்கும் வழியை திறக்கும்வரை யாரும் தெய்வீக புத்திர சுவீகாரத்தை பெற முடியாதிருந்தது.

அதேபோல இப்போது கூட நாம் தேவனுடைய குமாரர்களாக நிற்பதும் கூட தற்காலிகமானது. நாம் தேவனுடைய அன்பில் நிலைத்திருந்தால், நாம் அவர்களுடைய குமாரர்களாக நிலைத்திருந்து ஏற்றக்காலத்தில் பூரணராக்கப்படுவோம். ஆனால் யாராவது தெரிந்து செய்கிற பாவத்துக்கும் அதன் ஊழியத்திற்கும் திரும்பிச் சென்றால் அவன் தனது புத்திர சுவீகாரத்தை இழப்பான். அவனுடைய நாமம் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்திலிருந்து நீக்கப்படும். பிதாவுடன் அவனது பரிகாரியாக இருப்பதும் நின்று போகும். அவன் தேவனுடைய குமாரனாக நிலைத்திராததால் இன்னொருவன் அந்த இடத்தில் அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கமாக இருக்கும்படி அனுமதிக்கப்படுவான்.

இப்படியாக அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: “இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், (கருவாகஇருக்கிறோம்) இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் (நமது இரட்சகர், நமது தலையானவர்) வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம்.” (1யோவான் 3:2) அதாவது நமது தற்கால புத்திர சுவீகாரம் தற்காலிகமானது, உண்மையான புத்திர சுவீகாரம் நம்முடைய தகுதி காணும் சோதனை காலம் முடிந்த பிறகே ஆரம்பமாகும். தங்களுடைய விசுவாசம் மற்றும் உண்மைத்தன்மை ஏற்புடையதாக நிரூபிப்பவர்கள் மட்டுமே முழுமையான அளவில் மகிமையான உயிர்த்தெழுதலின் மாற்றத்தால் குமாரர்களாக ஆக்கப்படுவார்கள். இப்படியாக நாம், அர்ப்பணத்தின் முழு நீளம் செல்லும் வரை யாரும் N தளத்திற்கு போக முடியாததைப்போல யாரும் L தளத்தை அடையாதவரை புத்திர சுவீகாரத்தை பெற முடியாது என்பதை காண்கிறோம்.

### "மேன்மையான உயிர்த்தெழுதல்"

பழங்கால பாத்திரர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் முதலானவர்கள் (எபிரேயர் 11:38-40) தேவனுடைய குமாரர்கள் என்று கூறப்பட முடியாவிட்டாலும் குமாரர்களாக ஆகாவிட்டாலும், அவர்கள் அப்படிப்பட்ட தளத்திற்கோ அந்த பெயருக்கோ தகுதியற்றவர்கள் என்பதினால் அல்ல. அவர்கள் "தேவனுக்கு பிரியமானவர்களாயிருந்தார்கள்" என்று நமக்கு உறுதியளித்து, இதற்கு நமது கவனத்தை அப்போஸ்தலர் ஈர்க்கிறார். மேலும் பூரணத்திற்கு குறைவானது எதுவும் அவரை பிரியப்படுத்தாது என்றும் கூறுகிறார். அவர்களை குமாரர்களாக ஏற்றுக்கொள்ளுவதற்கு தடையாக இருந்தது எதுவென்றால், முதலாவது அவர்களது சார்பாக பாவ நிவாரண இரத்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவசியமாகும். பழங்கால பாத்திரர்கள் "மேலான உயிர்தெழுதலை" அனுபவித்து பரிபூரணர்களாக வருவார்கள் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். அவர்கள் பாவம் செய்வதற்கு முன் இருந்த ஆதாமைப்போல, மனதிலும், இருதயத்திலும் விருத்தியடைந்தவர்களாக, அப்பியாசப்படுத்தி, சோதிக்கப்பட்டு, தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் என்று நிரூபித்தவர்களாக இருப்பார்கள். அந்த பூரண நிலையில் அவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் மனுக்குலம் கீழப்படிதலினால் அடையப்போகிற நிலைமைக்கு உதாரணங்களாக இருப்பார்கள்.

அவர்கள் உயிர்த்தெழுந்த கணத்திலிருந்து இந்த பூரண மனிதர்கள், தேவனிடம் வர ஆதாம் பெற்றிருந்த அதே உரிமையை பெற்றிருப்பார்கள்; மேலும் ஆதாமைப் போல தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்பட தகுதியாயிருப்பார்கள். ஒரே காரியத்தை தவிர, அந்த ஒன்று என்னவென்றால், பழங்கால பாத்திரர்களும் மீதமுள்ள மனுக்குலத்தைப்போல மேசியாவின் ராஜ்யத்தில் ஆயிரம் வருடங்கள் புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தரின் கையில் இருப்பார்கள். வேத வாக்கியங்களின்படி அந்த காலத்தின் முடிவுவரை, ராஜ்யம் பிதாவனவரிடம் சமர்ப்பிக்கப்பட மாட்டாது.

ஆகையால் பழங்கால பாத்திரர்கள் கிறிஸ்துவின் ஆளுகை முடியும் வரை குமாரர்களாக பிதாவானவரிடம் நேரடியாக தொடர்பு கொள்ளவோ, அங்கீகரிக்கவோ முடியாது. பிறகு கிறிஸ்து, "தேவனே சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கு,"ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். அப்பொழுது சகலமும் பிதாவானவருக்கு கீழ்ப்பட்டிருக்கும். எனினும் ஆயிரம் வருடம் கிறிஸ்துவின் மத்தியஸ்த ஏற்பாடுகளில் பழங்கால பாத்திரர்களும் மற்றவர்களும் பூரணப்படுத்தப்படுவார்கள். பூரணத்தை பெற்ற அளவுக்குத்தக்கதாக, அவர்கள் சலுகைகளையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள். ஏனெனில், இனி அவர்கள் "இவ்வுலகத்தின் அதிபதியின்" கீழும், பாவம் மற்றும் மரணத்தின் கீழும் இராமல், ஜீவாதிபதியின் கீழாகவும் அவரது நீதியான ஆளுகைக்கு கீழாகவும் ஜீவனுக்குள் இருப்பார்கள்.

**R5325**

## ARE WE ACTUAL OR RECKONED NEW CREATURES?

# நாம் உண்மையிலேயே புது சிருஷ்டிகளா அல்லது புது சிருஷ்டிகளாக கருதப்படுகிறோமா?

"ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாக இருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின ."– 2 கொரிந்தியர் 5:17

புதுசிருஷ்டியைப் பற்றிய இந்த பாடம் தேவனுடைய வசனத்திலிருந்து நமக்கு வருகிறது. சத்திய ஆவி இதற்கு சாட்சியாக இருக்கிறது. "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் புதுசிருஷ்டியாக இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின; இதோ அவைகள் புதிதாயின." (டயக்லாட் மொழிபெயர்ப்பு) பிறகு வெளிப்படையாக நம்மிடமிருந்து பழையவைகள் ஒழிந்து போனால், நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி, நாம் இப்பொழுது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். நாம் இப்போது புது சிருஷ்டியாக கருதப்படுவதற்கு ஒன்றுமில்லை. மாற்றம் உண்மையானது, நம்பிக்கையுள்ளது. மனித சித்தத்தை தேவன் ஏற்றுக்கொள்ளும் போது, அர்ப்பணத்திற்கு முன் செய்த செயல்களை புதுசிருஷ்டியின் மேல் வைப்பதில்லை. முழு கணக்கும் புதிய ஒன்றாக இருக்கிறது.

நாம் தேவனால் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப் -பட்டிருக்கிறோம் என்ற பொருளில் நாம் புது சிருஷ்டியாயிருக்கிறோம். தேவன் நமக்கு பூமிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு பதிலாக பரலோகத்துக்குரிய வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். நாம் இனி உலகில் ஒரு பெரிய இடத்தை அடைவோம் என்று முயற்சி செய்வதில்லை. நமக்கு புதிய அபிலாஷைகள் இல்லை. நமது நோக்கமெல்லாம் தேவனுக்கு பிரியமாக வாழ்வதே. இந்த மனோபாவ மாற்றம் எல்லா வழிகளிலும் மனமாற்றத்தைக் குறிப்பிடுகிறது.

மாற்றம் என்பது மறுபடியும் எதிர்வழியில் வேறு விதமாக, குறுக்காக உருவாகுதல். நமது சித்தத்தின் இந்த மாற்றத்தால் நாம் மாற்றப்பட்டிருக்கிறோம். நாம் இந்த மாற்றத்தை செய்தால் அல்லது மாறினால், இனி அவர் நமது பாவத்தை கணக்கிடாமல், இது முதற்கொண்டு நாம் பாவிகளாக நில்லாமல் பரிசுத்தமுள்ளவர்களாக நிற்போம். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை உலகம் அறியாது. நாம் உலக நம்பிக்கைகள் முழுவதையும் விட்டுவிட்டதையும், உலகம் தேடுகிறதற்கு மாறான ஒரு வெகுமதியை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் அவர்கள் உணரவில்லை.

இந்த மாற்றம் மனதில் மட்டுமே இருக்கிறது, சரீரத்தில் இல்லை என்பது இந்த காரியத்தை திருத்தி அமைக்காது. விஞ்ஞானப்படி ஏழு வருடங்களுக்கு ஒருமுறை நமது சரீரம் முழுவதுமாக மாற்றப்படுகிறது. பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகின்றன. அவனது சரீரம் மாற்றப்பட்டதால் அவன் ஒரு புதிய மனிதனல்ல. இது அப்படியாக இருந்தால் இந்த காலத்தில் நாம் அநேக மாற்றங்கள் அடைந்திருப்போம். இதுவரை நமது மனதை

பொருத்தவரை குணநலம் மாறவில்லை. நாம் ஒரு கையை இழந்தால் நமது குணநலம் கூட அப்படியே இருக்கிறது. அல்லது நமது ஒரு காலையும் ஒரு கையையும் இழந்தால், இந்த இழப்பு நமது குணநலத்தை மாற்றாது.

இந்த காரியத்தில் நமது குணலட்சணம் மாறுவதில்லை. ஏனெனில் குணலட்சணம் என்பது நான் என்கிற சிந்தை ஆகும். ஆகையால் நான் என்கிற சிந்தை மாற்றம் அடையும் போது, அந்த புதுசிருஷ்டி மற்றதிலிருந்து தெளிவாக பிரிக்கப்படுகிறது. எனினும் அதற்கு ஒரு ஆவியின் சரீரம் இல்லாதிருப்பது பிரச்சனையல்ல. புதுசிருஷ்டி என்பது புதுசிருஷ்டிதான், பாதகமான சூழ்நிலைகளின் கீழ் இப்பொழுது தான் அவன் புதுசிருஷ்டி. அப்படியிருக்க அவன் புதுசிருஷ்டி ஆவான். அவன் என்றென்றைக்கும் நிலைத்திருக்கக்கூடிய, தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற தெய்வீக சுபாவம் மற்றும் நித்திய சந்தோஷத்துக்குள் நுழைந்திருக்கிறான்.

## தேவனுடைய பார்வையில் நமது நிற்குதல்

நாம் இப்பொழுது மாம்சீக சரீரத்தில் புது சிருஷ்டியாயிருக்கிறோம். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நீங்கள் கிறிஸ்துவுடன் எழுந்ததுண்டானால், மேலானவைகளையே நாடுங்கள்." சரீரம் எழவில்லை, ஆனால் புது சிருஷ்டி எழுந்திருந்தது. புதுசிருஷ்டி மரிக்கவில்லை, ஆனால் பழைய சிருஷ்டியே மரித்தது. "கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருப்பது," (கொலோசேயர் 3:3) பழைய சிருஷ்டியின் ஜீவனல்ல, ஆனால் புதுசிருஷ்டியின் ஜீவன். அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர் -களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்." மேலும் அவர், நாம் மரித்தவர்களாக மாத்திரம் கருதப்படாமல் மரித்தோரிலிருந்தும் எழுப்பப்பட்டவர்களாகவும் கருதப்படுகிறோம் என்று கூறுகிறார். "நீங்களும் உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்!" (ரோமர் 6:11)

சரீரமானது புதுசிருஷ்டியல்ல, ஆனால் அது புது சிருஷ்டிக்குரியது. அது புதுசிருஷ்டியின் ஊழியக்காரன். தேவனானவர் அங்கீகரிப்பதெல்லாம் புதுசிருஷ்டியை மட்டும்தான்; ஏனெனில் அவர் மாம்சப்பிரகாரம் நம்மை அறியவில்லை. நாம் ஆவியின்படி வாழ வேண்டும். நமது காரியங்கள் எல்லாம் இந்த நோக்குநிலையிலேயே இருக்க வேண்டும். "நாம் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்க வேண்டும்." (ரோமர் 8:14) நமது பார்வை இதுவாக இருக்க வேண்டும். நாம் புதுசிருஷ்டிகளாக கொஞ்சகாலம் மட்டுமே இந்த சரீரங்களில் வாழ்கிறோம்.

இந்த சரீரங்கள் நமக்கு அடிமை. நாம் அவற்றை நமது அடிமைகளாக பயன்படுத்த வேண்டும். தற்காலத்தில் சுற்றுப்புற சூழ்நிலைகள் புதுசிருஷ்டிக்கு சாதகமானதல்ல. ஆனால் தேவன் நோக்குவது புது சிருஷ்டியைத்தான்," "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின." அவன் நல்ல அர்ப்பணம் செய்வதில் தோல்வியடைந்தால், ஜெயங்கொள்ளுவதில் தோல்வியடைந்தால் அவனுக்கு உயிர்த்தெழுதல் இருக்காது; ஏனெனில் அவனது பூமிக்குரிய உரிமைகள் அழிந்துவிட்டன.

"நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவராயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்." மாம்சீக சரீரங்களை பெற்றிருந்து, புதுசிருஷ்டியாக கிரியை செய்கிறோம். ஆனால் மாம்சம் நாமல்ல; அதாவது நமது வகை அல்ல, நமது சுபாவமல்ல. ஒரு புதுசிருஷ்டியாக மட்டுமே நாம் வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளக்கூடும். இயேசு மாம்சத்திலேயே மரித்தார். அதாவது தமது மாம்சத்தை பலியாக கொடுத்தார். அவரது அர்ப்பணத்தில் மாம்சீக உரிமைகளை விட்டுக்கொடுத்தார். அவர் தமது உரிமைகளை விட்டுக்கொடுத்ததின் அடிப்படையில்தான் பிதாவானவர் அவரை புது சிருஷ்டியாக ஜெநிப்பித்தார். ஆகையால் அவர் கூறியதாவது: என் பிதாவின் சித்தத்தை செய்வதே என்னுடைய சித்தமாக இருக்கிறது. பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணுவேன். (யோவான் 18:11)

இயேசு அவரது பூமிக்குரிய உரிமைகளுக்காக நிற்கவில்லை. அவரது மரணம் கல்வாரியில் அல்ல, அது மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு யோர்தானில் ஆரம்பித்தது. நிழலில் பிரதான ஆசாரியன் காளையை பலியிட்டது மனிதன் இயேசுவை குறித்து காட்டியது. நமது கர்த்தர் தமது மானிட ஜீவியம் முழுவதையும் கொடுத்தார். பிரதான ஆசாரியன் வேறொரு நபராக இருந்தார். அவர் உள்ளே சென்று ஊழியம் செய்த பொழுது அவரது மானிட சுபாவம் பலிபீடத்தில் பலியிடப்பட்டு, அவரது சரீரம் பளையத்துக்கு புறம்பே, ஆனால் பாளயத்தின் பார்வையில் எரிக்கப்பட்டது.

## ஆத்துமாவுக்கும் புதுசிருஷ்டிக்கும் இடையேயான வேறுபாடு

ஒவ்வொரு புதுசிருஷ்டியும் ஒரு ஆத்துமா. ஆத்துமா என்ற வார்த்தை வேதவாக்கியங்களில் உண்மையிலேயே பரந்த முறையில் பயன்படுத்தப்படுகிறது. உணர்வுள்ள, அறிவும் உணர்ச்சியும் உள்ள எந்த ஒரு ஜீவியையும் இது குறிக்கிறது. ஒரு மீன் அறிவுத்திறனை பெற்றிருக்கிறது. ஆகையால் மீன் ஒரு ஆத்துமா என்று விளக்குகிறது. (ஆதியாகமம் 1:20 ஐ மார்ஜினில் பார்க்கவும்) ஒரு நாய், ஒரு பசு, ஒரு குதிரை ஒவ்வொன்றும் ஒரு ஆத்துமா. ஒரு தேவதூதன் ஒரு ஆத்துமா, ஒரு ஜீவி. தேவன் ஒரு ஆத்துமா அல்லது ஜீவி, வேதாகமம் அவ்வாறு கூறுகிறது. வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது." (எபிரேயர் 10:38) இது தேவனுடைய ஆத்துமாவைக் குறிக்கிறது.

ஆகையால் எந்த ஒரு அறிவுள்ள ஜீவியைக் குறித்த இந்த வார்த்தையின் பரந்த பயன்பாடு, புதுசிருஷ்டியாக நாம் அனைவரும் ஆத்துமாக்கள், அறிவுள்ள ஜீவிகள். நாம் இரட்டை ஆத்துமாக்களாக இருப்பதை நாம்

புரிந்துகொள்ள வேண்டும். அதாவது ஆரம்பிக்கும் போது நாம் மானிட ஆத்துமாவாக இருந்தோம். ஆனால் நமக்கான இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுடைய விசேஷித்த ஏற்பாட்டினால் நாம் புதுசிருஷ்டிகளாக இருக்கும்படி மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறோம். இந்த ஜெனிப்பித்தல் சிந்தைக்குரியதாகும். இந்த வழியில்தான் நாம் இப்போது புது சிருஷ்டிகளாக இருக்கிறோம்.

இந்த புதுசிருஷ்டி இன்னும் பூரணமடையவில்லை. இந்த புது ஆத்துமா, தேவன் எண்ணங்கொண்டிருந்த நிலைமைக்கு இன்னும் வரவில்லை. புதுசிருஷ்டிகள் இந்த பொக்கிஷத்தை பழைய சரீரத்தில் மட்பாண்டத்தில் பெற்றிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். புது சிந்தையானது சரீரத்தையோ அல்லது அதன் நண்பர்களது விருப்பத்தையோ பொருட்படுத்தாமல் பிதாவின் சித்தத்தை செய்ய வேண்டும். புது சிந்தையானது எல்லா சூழ்நிலைகளின் கீழும் பிதாவினுடைய சித்தத்தை செய்ய வேண்டும்.

ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளை நித்திய ஜீவனை முன்னரே பெற்றிருப்பதாகக் கூறலாம். அவன் விசுவாசத்தினால் அதைப் பெற்றிருக்கிறான். ஆனால் புது சிருஷ்டியானது, புது ஆத்துமாவானது இன்னும் முழுமையடையவில்லை. புதுஆத்துமாவானது முழுமையடைந்தால். கிறிஸ்துவைப் போன்ற சரீரத்தை நாம் பெறுவோம் என்பது தேவனுடைய வாக்குத்தத்தமாக இருக்கிறது. நாம் அவரைப்போல் இருப்போம். அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசித்து, அவரது மகிமையில் பங்கு பெறுவோம். நாம் தெய்வீக தளத்தின் ஆத்துமாக்களாக இருப்போம். ஆனால் நாம் மானிட தளத்தின் ஆத்துமாக்களாக இருந்தோம். இப்போது நாம் மாறுதலடையும் நிலைமையில் இருப்பதாக கருதப்படுகிறோம்.

## இரட்டை ஆத்துமாக்கள் – இரட்டை சிந்தையல்ல

நாம் இரட்டை ஆத்துமாக்களைப் பற்றி பேசும் போது, நாம் இரட்டை சிந்தையை நாம் அர்த்தப்படுத்தவில்லை. ஏனெனில் அது கண்டிக்கத்தக்க நிலைமையாக இருக்கும். நாம் ஒரு மனமுள்ளவர்கள். இரட்டை என்பது நாம் ஒருவகையான சிந்தையையும் வேறு வகையான சரீரத்தையும் உடையதாயிருக்கிறது. ஒரு பரிபூரண ஆத்துமா என்பது ஜீவிய கொள்கையுடன் இணைந்த உயிரினத்தை தருகிறது. இப்படியாக ஒரு மீன், ஒரு நாய். ஒரு குதிரையுடன் அது இருக்கிறது. அது ஆத்துமாவாக இருப்பதற்கு முன்பு ஒரு உயிரினம், ஒரு உயிர்ச்சக்தி, ஒரு ஜீவனின் பொறி இருக்கிறது. கர்த்தருடைய ஜனங்கள் ஆரம்பத்தில் சகல மனுக்குலத்தைப் போல பொதுவான ஆற்றல்களையே பெற்றிருந்தார்கள். பிறகு அவர்கள் மறுபடியுமாக ஜெனிப்பிக்கப்பட்டார்கள். புதுசித்தம், புதுசிந்தை, அதன் தேவைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு உயிரினத்தைப் பெற்றிருக்கிறது.

உயிர்த்தெழுதலில் புதுசிருஷ்டியானது அதன் தேவைக்கு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உயிரினத்தைப் பெற்றிருக்கும். ஆனால் இப்பொழுது அது மாம்சத்தின் ஒரு பூரணமற்ற, ஆவிக்குரிய தளத்தில் பூரணமடையாத ஒரு ஆத்துமாவாக இருக்கிறது. சித்தத்தோடும் சிந்தையோடும் இயற்கை சரியானபடி செல்வதால், மாம்சமானது புதுசிருஷ்டிக்குரியதாக கருதப்பட்டு, அந்த புதுசிருஷ்டி இந்த மாம்சத்திற்கு முழு பொறுப்பாக்கப்படுகிறது.

நமது பழைய சித்தம், பழைய சிந்தை மாத்திரம் மரித்ததாக கருதப்படாமல் நமது பழைய சரீரங்களும் மரித்ததாக கருதப்படுகிறது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இன்னும் மேலே சென்றால் நமது சரீரம் பாவம் நீக்கப்பட்ட நிலைமையில் உயிர்ப்பிக்கப்பட்டு அல்லது உயிர் கொடுக்கப்பட்டு, புதுசிருஷ்டிக்கு ஊழியர்களாக, நமது நோக்கங்களை நிறைவேற்றுபவைகளாக ஆக்கப்படுகின்றன. “நமக்குள் நிலைத்திருக்கிற தேவனுடைய ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டு” நிலைத்திருக்கிற பரிசுத்த ஆவியின் வல்லமையை பொருத்தவரை, அது நமது இருதயத்தையும், சிந்தையும் ஆளுகை செய்து, நமது மாம்சீக சரீரத்தை கட்டுப்படுத்தி, சக்தியூட்டுகிறது.

## சுயகட்டுப்பாட்டின் இரகசியம்

நாம் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டதி –லிருந்து தேவன் நம்முடன் புதுசிருஷ்டியாக தொடர்பு கொள்ளுகிறார். அவர் மாம்சத்துடன் தொடர்பு கொள்ளுவதில்லை. மாம்சமானது ஆக்கினைத்தீர்ப்புக் –குள்ளாயிருக்கிறது. தேவன் தகப்பனாகிய ஆதாமின் மாம்சத்துடன் தொடர்பு கொண்டு அதை அழிவுக்குள்ளாக தீர்ப்பு செய்தார். பிறகு அவர் கிறிஸ்து மூலம் ஒரு வழியை கொடுத்தார். அதன் மூலம் மனுக்குலமானது அழிவிலிருந்து காக்கப்பட்டது. தேவனுடனான சபையின் உறவு முற்றிலுமாக புதுசிருஷ்டியாகவே ஆகும். அந்த சமயத்திலிருந்து நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புது சிருஷ்டியாகிறோம். அவரது ஊழியத்திற்கு அர்ப்பணம் பண்ணப்பட்ட நமது அழிந்துபோகக்கூடிய சரீரங்களை புதுசிருஷ்டியின் ஒரு பாகமாக தேவன் எடுத்துக்கொள்ளுகிறார். ஆகையால் நாம் பாடுபட்டால், பாடுபடுவது புதுசிருஷ்டியாகும். இந்த உணர்வில் நமது அர்ப்பணத்திலிருந்து நமது சரீரத்தை கவனத்தில் எடுத்துக்கொள்ளுகிறார். “கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.”

நமது மானிட சரீரங்கள் அவரது ஊழியத்திற்கு வாகனமாக இருப்பதால் தேவன் அவைகளை தமது கவனத்தில் எடுத்துக்கொள்கிறார். நாம் எந்த அளவுக்கு கர்த்தருடைய ஆவியில் பலப்படுகிறோமோ அதற்கு தக்கதாக, புதுசிருஷ்டியின் சித்தத்தை செய்ய நமது அழிவுக்குரிய சரீரங்களை கட்டுப்படுத்தும் சக்தியை பெற்றிருப்போம். ஆனால் நாம் பலவீனமாக இருந்தால், நமது மாம்சீக சரீரத்தை சரியாக கட்டுப்படுத்த முடியாது. ஆகையால் தேவன் நமக்கு தமது சத்தியத்தை கொடுக்கிறார். நாம் சத்திய ஆவியை அதிகமாக பெறுவோமானால், நாம் முழுவதுமாக பரிசுத்தமாக்கப்பட்டு, பிதாவானவர் சித்தத்திற்கு முழுவதுமாக இணக்கத்திற்கு வந்து, நமது அழிவுக்குரிய சரீரத்தை அதிகமாக முழு கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவோம்.

## R5327

# OBLIVION NOT ANNIHILATION
# மறதி நிர்மூலமாக்குதல் அல்ல

**கேள்வி:** பாதாள **(Hades)** நிலைமையை மறதியின் நிலைமை அல்லது நிர்மூலமாக்கப்பட்ட நிலைமை என்று கூறலாமா?

**பதில்:** நிர்மூலமாக்கப்பட்ட நிலைமை, மனிதனின் மரண நிலைமையை குறிப்பது என்று கூறுவது சரியல்ல, இரண்டாம் மரணத்தைக் குறிக்க பயன்படுத்தலாம். நிர்மூலமாக்கப்பட்ட நிலைமை என்பது முற்றிலுமாக இல்லாமல் போவது. ஆகையால் பாதாள நிலைமையை குறிக்க நிர்மூலமாகுதல் என்ற வார்த்தையை பயன்படுத்துவது சரியல்ல. மறதி என்ற வார்த்தை, நிர்மூலமாக்குதல் என்பதைக் குறிக்காது. மறதி என்ற வார்த்தை முற்றிலுமாக உணர்வில்லாத நிலைமை. உதாரணமாக, ஒரு மனிதன் ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்றால் அவன் மறதியின் நிலைமைக்குச் செல்லுகிறான். நான் ஒரு மணி நேரமாக மறதியின் நிலைமையில் இருந்தேன் என்று அவன் கூறலாம். நடந்த எதையும் அவன் அறியாதிருந்தான்.

நாம் விசேஷமாக வேதாகமத்தின் வழியில் பேசும்போது, முடிந்தவரை சரியான வார்த்தையை பயன்படுத்தினால் குழப்பம் வராமல் தடுக்கலாம். வேதாகமமானது மிகவும் சிறந்த முறையில் எழுதப்பட்டிருக்கிறது. நமது பொதுவான மொழி பெயர்ப்பு மிகவும் அழகான மொழியாக இருக்கிறது. அதன் ஆங்கிலத்தில் அது மிகவும் நேர்த்தியாக இருக்கிறது. நாம் வேதாகம வார்த்தையை, வேதாகமம் பயன்படுத்துகிற வார்த்தையை நாம் பயன்படுத்தினால், நாம் தவறாக புரிந்துகொள்கிற ஆபத்தில் இருக்கமாட்டோம். நாம் பரந்த அளவில் இல்லை என்று ஒருவர் நினைத்தால், நாம் கர்த்தரின் வசனத்தை தவறாக புரிந்து கொள்ளுவதையும் தவறான விளக்கங்களையும் நாம் தவிர்த்திருக்கிறோம் என்பதை நாம் அறிகிறோம். ஆதேஸ் **(Hades)**, ஷியோல்**(Sheol)** போன்ற வார்த்தைகள் பொதுவான மொழி பெயர்ப்பு வேதாகமத்தில் இல்லை. ஆனால் இவைகள் கடந்த சில பத்தாண்டுகளில் ஆங்கில மொழியில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த வார்த்தைகளை பயன்படுத்துவது சரியானதாக இருக்கிறது. ஏனெனில் அவைகள் நமக்குரியதாக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**கேள்வி :** பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள இந்த சொற்றொடர்களுக்கு வித்தியாசமென்ன: "அவர்கள் இராதவர்களைப்போல இருப்பார்கள்" மற்றும் "அவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்" மற்றும் நிர்மூலமாக்குதல் என்ற வார்த்தை?

**பதில் :** இவைகளெல்லாம் ஒரே பொருளுடையவையாக இருக்கின்றன என்று புரிந்து கொள்ளுகிறோம். இந்த வேதவாக்கியங்கள் இரண்டாம் மரணத்தை மட்டுமே குறிக்கின்றன. மீட்பு இல்லாத முதல் மரணத்தை குறிப்பதற்கு கூட அவைகள் பயன்படுத்தப்படலாம். ஆனால் ஆரம்பத்திலிருந்து தேவனுடைய உத்தேசம் வேறாக இருக்கிறது. மீட்கும் விலை கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் "அவர்கள் இல்லாதவர்கள் போல இருப்பார்கள்" என்ற சொற்றொடர் முற்றிலுமாக விழுந்து போகக்கூடிய தற்காலத்தில் குறிப்பிட்ட முறைமைகளை குறிப்பதாக இருக்கலாம். அதே சொற்றொடர் மனுக்குலத்திற்கும் பயன்படுத்தப்படலாம். தற்காலத்தில் வேண்டுமென்றே பாவம் செய்து இரண்டாம் மரணத்தில் மரிக்கிறவர்களும் ஆயிரம் வருட யுகத்தில் வேண்டுமென்றே பாவம் செய்து இரண்டாம் மரணத்தில் மரிக்கிறவர்களும் முற்றிலுமாக அழிந்து போவார்கள், நிர்மூலமாவார்கள்.

ஆனால் முதல் மரணத்திற்கு அதைப் பயன்படுத்தினால் அது தவறாக இருக்கும். தேவன் நன்மையானதை கொடுத்திராவிட்டால் மிருகத்தைப் போலவே மனிதனும் அழிந்து போகிறான் என்று நாம் கூறலாம். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று நமது முதல் பெற்றோரிடம் உறுதியளித்திருக்கிறார். இப்படியாக எதிர்கால ஒரு மீட்பைக் குறித்து அவர் தெளிவற்ற ஒரு வாக்குத்தத்தத்தை கொடுத்தார். நிர்மூலமாக்குதலில் இருந்து மீட்பே கிடையாது. அது எல்லா நம்பிக்கைகளுக்கும் முடிவாக இருக்கிறது.

## R5328

# RESUME OF THE ENDING OF THE TIMES OF THE GENTILES
# புறஜாதியாரின் காலத்தின் முடிவு மறுபடியும் தொடங்குதல்

புறஜாதியாரின் காலத்தின் முடிவு முழுமையான இலக்கத்தில் அக்டோபர் 1914 என்று நாங்கள் நினைக்கிறோம். எனினும் உண்மையில் அக்டோபர் முதலாம் தேதி யூத வருடத்தின் முடிவு அல்ல. அது அதன் ஆரம்பத்தை போலவே அதன் முடிவிலும் மாறுகிறது. அது சூரியனுக்கு பதிலாக சந்திரனால் ஒழுங்குபடுத்தப் -படுகிறது. சந்திரனால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த நிரந்தர ஏற்பாட்டிலிருந்து யூத காலண்டர் விலகிச் செல்லவே செல்லாது. 1914 என்பது தன்னிச்சையான தேதி அல்ல; அது வேதாகம காலகணக்கின் மூலமாக போதிக்கப்படுவதாக காணப்படுகிறது. யூதர்களுக்கான கிருபை சரியாக அந்த காலத்தில் ஆரம்பிக்கும் என்றோ அல்லது புறஜாதியார் காலம் சரியாக அந்த காலத்தில் முடியும் என்றோ வேத வாக்கியங்கள் போதிப்பதாக நாங்கள் சொன்னதேயில்லை.

எங்கள் அறிவுக்கு எட்டின வரை சிறந்த காலக்கணக்கின்படி ஏறக்குறைய அந்த காலமாக இருக்கும் என்று நாங்கள் கூறுகிறோம். அது அக்டோபர் 1914 ஆகவோ அல்லது அதற்கு பின்னரோ இருக்கலாம். பிடிவாதம் இன்றி. குறிப்பிட்ட நிகழ்வுகளை நாம் கவனிக்கிறோம்; ( 1 ) புறஜாதியார் காலம் அவர்களது அதிகாரம் முடிவடைதல் மற்றும் ( 2 ) உலகத்தில் மேசியாவின் ராஜ்யம ஆரம்பமாகுதல். பூமியின் ராஜ்யங்கள் முடிவுக்கு வரும். "பரலோகத்தில் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்." (தானியேல் 2:44) ஆபத்து ஒரு மணி நேரமோ அல்லது ஒரு நாளோ அல்லது ஒரு வருஷமோ வரும் என்று வேத வாக்கியங்கள் கூறவில்லை. பேராபத்தானது நமது நாகரீகத்தின் மேல் திடீரென்று வரும் என்று நமக்கு சொல்லப்படுகிறது. (வெளிப்படுதல் 18:8, 10, 17,21; 1 தெசலோனிக்கியர் 5:3) அது பன்னிரண்டு மாதத்திற்குள் வருவது போல திடீரென்று வரும். ஜலப்பிரளயத்திற்கு அநேக நாட்கள் தேவைப்பட்டது, வடிகிறதற்கும் அநேக நாட்கள் தேவைப்பட்டது.

## நோவாவின் நாட்களைப் போலவே தற்காலமும் இருக்கும்

"அப்பொழுது இருந்த உலகத்தின்" முடிவும் சுவிசேஷ யுகத்தின் முடிவும் ஒரே மாதிரி இருக்கும் என்பதே மேசியாவின் ராஜ்யத்தின் தொடக்கத்தைப்பற்றிய எங்கள் கருத்தாக இருக்கிறது. மேசியாவின் ராஜ்யத்தின் தொடக்கத்தோடு இணைந்த நிகழ்வுகள் கன நேரத்திற்குரியதாகவோ, உடனடியானதாகவோ, ஒரு மணி நேரத்திற்குரியதாகவோ அல்லது ஒரு நாளைக்குரியதாகவோ இருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அது படிப்படியாக தொடர்ந்து முன்னேறுகிற ஆபத்தாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத" ஆபத்தின் உச்சக்கட்டமாக அது இருக்கும்.

பிறகு சமாதானமும் ஆசீர்வதமுமான தேவனுடைய கிருபையை கொண்டு வருவதற்கு அது ஒரு குறிப்பிட்ட காலத்தை எடுத்துக்கொள்ளும். கால் வைத்து இளைப்பாற இடம் இல்லாமல் பேழைக்கு திரும்பி வந்த புறாவினால் குறிப்பிடப்பட்டது போல, இந்த சமாதானம் அபிவிருத்தி அடைய சில காலம் ஆகும். புறாவானது மறுபடியும் அனுப்பப்பட்டு, ஒலிவ மரத்தின் இலையுடன் திரும்பி வந்தது. அது தேவனுடைய ஆசீர்வாதம் தாவரத்தை திரும்பி கொண்டு வந்ததின் மூலம் குறிப்பிடப்பட்டது. இப்படியாக தண்ணீர் கணிசமான அளவிற்கு குறைந்ததை நோவா அறிந்தார். ஆபத்தின் காலமானது ஒரு வருடத்திற்குள் நீங்கிவிடும் என்று உத்திரவாதம் கொடுக்க விரும்பவில்லை. வேதாகமமானது ஆபத்தின் வகையை படம் பிடித்து காண்பிப்பதின்படி, எந்த மனுக்குலமும் உயிருடன் விடப்படாது என்று சொல்லும்போது அது ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்கும் என்று நாம் எண்ண முடியாது. எந்த மாம்சமும் காக்கப்படாது, சகலமும் அழிக்கப்படும். இந்த நாட்கள் குறைக்கப்பட்டால் ஒழிய அதுவே உண்மையாகும் என்று கர்த்தர் அறிவிக்கிறார். (மத்தேயு 24:22)

## தீர்க்கதரிசனத்திலிருந்து வெளிச்சம்

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அந்த காலத்திற்கு முன்பே ராஜ்யத்தை அமைப்பார்கள். தெய்வீக திட்டத்தின்படி அவர்கள் ஆசீர்வதிக்கிற வேலையையும் திரும்பிக்கொடுக்கிற வேலையையும் ஆரம்பிப்பார்கள். இதன் பலனால் உலகின் போரும் ஆபத்தும் முடிவுக்கு வரும். இப்படியாக துன்பங்கள் தொடர்ந்து நீண்ட காலம் நீடிக்காது. ஒலிவ கிளை துளிர்விடும், கால் வைத்து இளைப்பாற இடம் கிடைக்கும், புதிய யுகம் முழுவதுமாக ஆரம்பிக்கப்படும்.

புறஜாதியாரின் காலத்தைக் குறித்த காரியங்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் மூலமாக நாம் இரண்டு வாக்குத்தத்தங்களை பார்க்கிறோம். ஒன்று யூதர்களைப் பற்றியது, மற்றொன்று உலகத்தைப் பற்றியது. புறஜாதியாரின் காலம் என்று அறியப்பட்ட 2520 வருட காலப்பகுதியில் யூதர்கள் புறஜாதியாரிடமிருந்து துன்பங்களை பெற வேண்டியவர்களாக இருந்தார்கள். "உண்டாயிருக்கிற அதிகாரங்களுக்கு" கீழ்ப்படிய வேண்டியவர்களாக அவர்கள் இருந்தார்கள். இந்த காலப்பகுதியின் முடிவில் சபையானது மகிமையடையும். அந்தக்காலம் வரை ராஜ்யம் ஸ்தாபிக்கப்படாது. புறஜாதியாரின் கால முடிவில் மேசியா தோன்றி, அவரது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்.

இஸ்ரயேலின் கடைசி ராஜாவாகிய சிதேக்கியா குறித்து நாம் வாசிக்கிறதாவது: "இஸ்ரயேலை ஆளுகிற அவ பக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, ஆக்கிரமத்துக்கு முடிவு வரும் காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு... அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவன் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." (எசேக்கியேல் 21:25-27) இந்த கவிழ்த்துப்போடும் காலம் 2520 வருடங்கள் என்று சரியாக புரிந்து கொள்ளப்பட்டால், அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் அவரது ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது முடிவுக்கு வரும் என்று காணப்படும். மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை, புறஜாதிகளின் மேலதிகாரம் ஒவ்வொரு தேசத்திலும் கடந்து போகும். ஜெருசலேம் மிதிக்கப்படுவது முடிவுக்கு வருவதை இது நிரூபிக்கும். புறஜாதியாரின் காலம் முடிந்த பிறகு இது தொடராது.

சிதேக்கியா காலத்தில் ராஜ்யபாரம் கிமு 606 யூதரிடமிருந்து நீக்கப்பட்டு, உலகமானது புறஜாதியார்களிடம் கொடுக்கப்பட்டது. யூதர்களுக்கென்று சொந்த அரசாங்கம் இல்லாத 2520 வருட காலத்தில் புறஜாதியார் அரசாங்கம் அவர்களால் முடிந்தவரை பராமரிக்கும் சலுகையை பெற்றார்கள். ஒரு தேசத்திற்கு பிறகு இன்னொரு தேசம் உலகத்தை ஆட்சி செய்ய முயற்சித்தது. முதலாவது பாபிலோன், பிறகு மேதோ பெர்சியா பிறகு கிரேக்கம், பிறகு ரோம ராஜ்யம். நான்காவது சர்வ உலக ராஜ்யமாக ஆளுகை செய்த போப்பின் ரோம ராஜ்யமும் இது உள்ளடக்கியது. உலகத்தின் ராஜ்யம் மேசியாவின் ராஜ்யமாக மாறும் காலத்திற்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம். அது அக்டோபர் 1914 அல்லது அக்டோபர் 1915 ஆகவோ இருக்காது என்று நாம் சொல்ல முடியாது. வருடங்களின் எண்ணிக்கையை கணக்கீடு செய்வதில் சரியில்லாமல் இருப்பதற்கு சாத்தியம் இருக்கிறது. உறுதியாக நம்மால் கூற இயலாது. நாம் அறியோம். அது அறிவுக்குரிய காரியமல்ல விசுவாசத்துக்குரிய காரியமாகும். "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."

## "பலவான்" நீக்கப்பட வேண்டும்

இந்த புறஜாதியார் காலம் முடிவடையும் போது, மாறுதல் ஒரு பளிச்சிடும் மின்னலைப்போல வரும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. உதாரணத்திற்கு நியுயார்க்கில் ஒரு வாடகை வீடு மே1ஆம் தேதி காலி பண்ண வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். பிறகு புதிதாக வாடகைக்கு வருவார்கள். இதற்கு கொஞ்ச காலம் தேவைப்படுகிறது. ஆகையால் பெரிய மாற்றம் இப்போது சமீபித்திருக்கிறது. உலகத்தை வாங்கினவர் அதை உடைமையாக்கிக் கொள்ளப்போகிறார். இந்த உலக ராஜ்யங்கள் நீக்கப்படப்போகின்றன. உலகத்தில் காலி பண்ணவேண்டிய நாள் வரும்போது, சிலர் இதுதான் காலி பண்ண வேண்டிய நேரம் என்று சொல்லுவார்கள். அவர்கள் மே 1ஆம் தேதி காலை காலிபண்ணுகிறார்கள். சிலர் முந்தின நாளே காலி பண்ணுவார்கள். சிலர் காலிபண்ணவேண்டிய நாளின் மதியானம் வரை இருப்பார்கள். சிலர் வெட்கமில்லாமல் வீணான சந்தடி செய்து, காலி செய்வது தனக்கு தொந்திரவாக இருக்கிறது என்று கூறி, போகும் போது வீட்டை மிகவும் மோசமான நிலைமையில் வைத்துவிட்டுச் செல்வார்கள்.

குத்தகைக்கு விடப்பட்ட புறஜாதியார் காலம் முடிவடையும் பொழுது இதே போல் நடக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம். குத்தகைக் காலம் முடியும் முன் காலி பண்ணுதல் நடைபெறாது. ஒருவேளை நீங்கள் வீட்டுச் சொந்தக்காரராக இருந்து, மேல் மாடியை

வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள். குடித்தனம் இருக்கிறவன் வீட்டை காலி பண்ண மறுக்கிறான். நீங்கள் என்ன செய்வீர்கள்? அவனை காலி பண்ண ஒரு அதிகாரியை நாடுகிறீர்கள். அவர் வந்து குடித்தனக்காரனை வெளியே அனுப்பி, அவனது பொருட்களை எல்லாம் தெருவில் எறிவார். ''உலகத்தின் அதிபதி'' வெளியேற தாமதிக்கும் பொழுது அவன் கையும் காலும் கட்டப்பட்டு வெளியில் போடப்படுவான் என்பதை இது நமக்கு சித்தரித்துக் காட்டுகிறது. (மத்தேயு 12:29) பெரிய துன்பம் வரப்போகிறது என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் கொஞ்ச காலம் சென்ற பிறகு முழுவதுமாக தெரிந்துகொள்ளுவோம்.

''நான் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்.... உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதை கொடுப்பேன்.'' (எசேக்கியல் 21:27) புதிய ராஜா தனது ராஜ்யத்தை ஒரு நிமிடத்திலோ அல்லது ஒரு மணி நேரத்திலோ அல்லது ஒரு நாளிலோ ஸ்தாபிக்கமாட்டார். அவர் முன்னரே வந்திருக்கிறார். அவர் ஏற்றக்காலத்தில் உரிமையாக்கிக் கொள்ளுவார். அவர் வீட்டை எடுத்துக்கொள்ள தயராகிறார். அதில் குடியிருப்பவன் வெளியேறுவதா அல்லது இல்லையா என்று முற்றிலும் உறுதியில்லாதிருக்கிறான். அவன் வீட்டை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். பலவான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்தால் தனது வீடு உடைக்கப்பட அனுமதித்திருக்க மாட்டான் என்று கர்த்தர் கூறினார்.

## குத்தகை முடியுமுன்பே சபை மகிமையடையும்

நாம் இந்த காரியத்தை புரிந்து கொண்டதின்படி சபையானது அதற்கு முன்னதாக மகிமைப்படுத்தப்படும். குத்தகை முடியும் போது, புதிதாக குடியிருக்கப் போகிறவர்கள் அதை அனுபவிக்க தயாராவார்கள். முன்னமே அவர்கள் மகிமைப்படுத்தப்படவில்லை -யென்றால் புதிய குடித்தனக்காரர், அதை அனுபவிக்க எப்படி தயாராவார்கள் என்பதை நாம் காண இயலாது. அவர்கள் இன்னும் மாம்சத்தில் இருந்தால், அதை அனுபவிக்க தயாராக இருக்க மாட்டார்கள். ஆகையால் சபையானது 1913இல் இங்கே இருப்பதால், நாம் தவறு செய்திருக்கிறோம் என்று எண்ணுகிறோம். இப்பொழுதிலிருந்து 1914 முடிவுக்குள் எப்படி எல்லாரும் மரிக்க முடியும் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. உலக முழுவதிலும் ஒரே சிந்தையுடைய ஜனங்கள், இவ்வளவு பேர் ஒரு குறுகிய காலத்தில் திரைக்கப்பால் எப்படி செல்ல முடியும்.

ஆனால் கர்த்தர் இந்த விஷயத்தில் எப்படி ஒரு அளவுக்கு நம்மை அறியாமையில் விட்டிருக்கிறார் என்பதை நாம் காண முடியும். அக்டோபர் 1914 என்று நமக்கு நிச்சயமாக தெரியாது. சபை முழுவதும் மகிமையடைவதையும் ஆபத்தின் காலம் வருவதையும் நாம் காண்போம். நாம் சும்மா ரூபகாரங்கள் இங்கே இருக்கிறது என்று கூறுகிறோம். இங்கே ஆதாரங்கள் இருக்கிறது. நீங்களே பார்த்து, எதை நீங்கள் சிந்திக்க முடியும் என்பதைப் பாருங்கள். உண்மைகளை ஏற்றுக்கொள்ளுவதும் மறுப்பதும் அவரவர்களுடையது. (வேதாகம பாடங்கள் தொகுதி 2ஐப் பார்க்கவும்)

இந்த காலக்கணக்கு நியாயமாக சரியானதாக இருக்கிறது என்றும் விசுவாசத்திற்கு ஒரு நல்ல அடிப்படையாக இருக்கிறது என்றும் நாம் காரணத்தோடு கூற முடியும். ''நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.'' சரியான நேரத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்பதை தேவன் நமக்கு சொல்லவில்லை. ஆனால் காலம் அதிகமாக செல்லச்செல்ல, குறிப்பிட்ட மதிப்புமிக்க தகவல்களையும் நாம் எதிர்பார்க்கிற காரியங்கள் நிறைவேறிக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

## நிகழ்கால கண்ணோட்டம்

இந்த தேதிகளைக் குறித்த தகவல்களை வெளியிடவும் எதிர்காலத்தில் சீக்கிரத்தில் எதிர்பார்க்க வேண்டியவைகளை விளக்கவும் நாம் ஆரம்பிக்கும் போது, உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோமானால், வெளிப்படுத்தின விசேஷம் அதிகாரம் 12 மற்றும் 13இன் நிறைவேறுதலைப்பற்றிய அடையாளமே இல்லை. சபைகளின் கூட்டமைப்பு ஏற்படும் என்றும் அனைத்து புராட்டஸ்டன்ட் சபைகளின் பொது ஐக்கியம் ஏற்படும் என்றும், ஆனால் கத்தோலிக்கர்கள் அவர்களுடன் இணையமாட்டார்கள் என்றும் நாங்கள் குறிப்பிட்டோம். அந்த சமயத்தில் புரட்டஸ்டன்ட் அனைவரும் இணைவார்கள் என்பதைத் தவிர வேறு எதுவும் காணப்படாது. சில வருடங்களுக்கு முன்பு இவாஞ்சலிக்கல் அலையன்ஸ் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு சபைப்பிரிவினர்கள், வெவ்வேறு சபை பிரிவுகளாக இருப்பதைக் காட்டிலும் அது நல்லதாக இருந்ததாக வற்புறுத்தினார்கள். போட்டி வாழ்க்கையில் இருப்பது போல சபை வாழ்க்கையிலும் இருந்ததாக கூறினார்கள். அது அவர்களுடைய வாதமாக இருந்தது.

எனினும் இப்பொழுது அந்த உணர்வு எல்லாம் படிப்படியாக போய்விட்டது. அவர்கள் ஒன்றிணைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சபைப்பிரிவின் பெயரையோ, கதவு தகட்டையோ, சவப்பெட்டியுடன் தகட்டையோ தூக்கி எறிய விரும்பவில்லை. ஆகையால் பெயர்களை பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் கூட்டமைப்பு நெருங்கிக் கொண்டிருக்கிறது. ''அக்கினியானது வானத்திலிருந்து வேகமாக கீழே வரும்'' என்று நாம் நினைப்பதைக் காட்டிலும் அது வந்திருக்கிறது என்பது உண்மையாயிருக்கிறது.

எனினும் கட்டமைப்பானது அதிகமாக துன்பப்படுத்துகிற அளவுக்கு இன்னும் அது சரியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. அது பல்வேறு நகரங்களில் செய்தித்தாளில் பிரசங்கங்களை பிரசுரிப்பதை தடை பண்ணியிருக்கிறது. செய்தித்தாள்களில் சில அதை விட்டுவிட பலவந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. சபை ஊழியர்கள் செய்தித்தாளின் அலுவலகத்திற்கு சென்று, உங்கள் செய்தித்தாள்களை நாங்கள் புறக்கணிப்போம் என்று கூறி அதைச் செய்தார்கள். சில ஆசிரியர்கள், போங்கள், போய் புறக்கணியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சில ஆசிரியர்கள் அநேக சபைப்பிரிவுகளுக்கு எதிராக செயல்படமாட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். இந்த எதிர்ப்பு அமைப்பு மிகவும் பெரிதாக காணப்பட்டது. ஏனெனில் அநேக ஊழியக்காரர்கள் எடுத்துச் சொன்னார்கள். சில ஜனங்கள் இந்த ஊழியக்காரர்களை அதிகமாக நினைப்பதைக் காட்டிலும் உயர்வாக நினைப்பதை இந்த ஆசிரியர்கள் நிறுத்தாமல், ஞாயிற்றுக்கிழமையில் அவர்களது பிரசங்கத்தை கேட்க செல்கிறார்கள். ஆனால் போதகர்கள் மேன்மேலும் அதிக சக்தியுடன் இதைச் செய்ய முயல்கின்றனர்.

நாம் எடுக்கிற ஒவ்வொரு முயற்சியையும் தடுக்கிற நேரம் நிச்சயம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாம் ஒவ்வொரு படியிலும் முடிந்தவரை கதவை திறந்தே வைக்க நோக்கங்கொள்ள வேண்டும். நாம் படுக்கப்போகிறதில்லை. நாம் படுக்கப்போகிறோமா? இந்த நிலைமைகள் நாம் எதிர்ப்பார்க்கிற மாதிரி வேகமாக வரவில்லையென்றாலும், குறித்த நேரத்தில் படிப்படியாக வந்து கொண்டிருக்கிறது. தேவனுடைய அமைப்புகள் எல்லாம் சாதரணமாக மெதுவாகத்தான் இருக்கும். ஆனால் இந்த காரியத்தில் ஏதாவது உடனே நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்; தற்கால முறைமைகள் திடீரென்று தூக்கியெறியப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கு காரணம் என்னவென்றால், இந்த “மிருகம்” வல்லமையை (வெளிப்படுத்தல் 13:11-17) பெறவேண்டும் என்றால் அது சீக்கிரத்தில் வரவேண்டும்.

இவையெல்லாம் நிச்சயமாக நடக்கும். இது சுலபமாக கடந்து போவதை நாம் பார்க்கிறோம். தற்காலிக செழுமையும் கத்தோலிக்கருடன் ஒற்றுமையும் இருக்கலாம். இந்த கூட்டமைப்பு இன்னும் ஒரு வருடம் தொடர்ந்து செழிக்கும். அக்டோபர் 1914-க்கு முன் நிறைவேற்றவேண்டியவைகளை நிறைவேற்றும். பாபிலோனின் விழுகை அந்த தேதிக்கு பிறகு சீக்கிரத்தில் தொடரும். அந்த சமயத்தில் அது நடைபெற வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற இன்னொரு காரியம் யூதர்கள் பலஸ்தீனாவுக்கு திரும்புதல். யூதர்கள் பலஸ்தீனாவுக்கு திரும்புவதைக் குறித்து இப்போது அதிகமாக பேசப்படுகிறது. இந்த விஷயத்தில் அதிகமான ஆவல் எழும்பியிருக்கிறது. யூதர்கள் பரிசுத்த தேசத்திற்கு திரும்புதல் குறித்து முதலாவது நாங்கள் கவனத்தை ஈர்க்க ஆரம்பிக்கும் போது, அதைக் குறித்த எந்தவித அமைப்பும் இல்லை. எல்லாம் அதிலிருந்து வந்துகொண்டிருக்கிறது. நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு அது இன்னும் அபிவிருத்தி அடையவில்லை, ஆனால் வந்துகொண்டிருக்கிறது. அக்டோபர் 1914 அல்லது அக்டோபர் 1915 அல்லது வேறு தேதியில் (கர்த்தர் அறிவார்) புறஜாதியார் காலம் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து ஒரே நாளிலே புரட்சிகரமான எழுச்சி எதுவும் இருக்காது. ஆனால் அதன்பிறகு அதிக நாட்கள் நீடிக்காது என்று நாங்கள் நம்புகிறோம்.

**R5331**

## TEST OF THE APOSTLES AND ITS LESSON
# அப்போஸ்தலர்களுடைய சோதனையும் அதன் பாடமும்

“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.”- மாற்கு 14:38

இந்த வார்த்தைகள் நமது ஆண்டவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே கெத்செமனே தோட்டத்தில் பேசப்பட்டவை என்பதை நாம் அறிவோம். இவைகள் அவரோடிருந்த பதினோரு பேருக்கும் மிகவும் பலமாக, குறிப்பாக, தோட்டத்தில் ஜெபிப்பதற்காக அவர் கொஞ்சம் தள்ளி சென்ற போது, அவரோடிருக்கும்படி அவர் அழைத்துச் சென்ற மூன்று பேருக்கும் சொன்னார். அந்த இரவில் நடக்க வேண்டிய ஆச்சரியமான நிகழ்வுகளை எல்லாம் உணர்ந்தவராக காணப்பட்டார். ஆனால் அப்போஸ்தலர்கள் நிலைமையை உணர்ந்து கொள்ளவில்லை. அவர்கள் காதுகள் கேட்பதற்கு மந்தமாக இருந்தன. அவர்கள் விசுவாசம் இல்லாதிருக்கவில்லை. அலட்சியமான காரியம் அவர்களிடத்தில் இல்லை. ஆனால் புரிந்துகொள்ளவில்லை.

அப்போஸ்தலர்கள் அந்த சமயத்தில் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கவில்லை என்பதை நாம் நினைவுகூர வேண்டும். ஆகையால் அவர்கள் முழுவதும் விழித்திருந்து, ஆவியில் ஒளியூட்டப்பட்டவர்களைப் போல கர்த்தருடன் ஜெபிக்க முடியவில்லை. அவர் சிலுவையில் அறையப்படுவார் என்று இயேசு அவர்களுக்கு கூறியிருந்தார். ஆனால் அவர்கள் அந்த கூற்றை கருகலான காரியமாக எடுத்துக்கொண்டார்கள். அநேக உவமைகளை அவர் ஜனங்களுக்கு கொடுத்திருந்தார். ஆனால் அவர்கள் அதை புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியை பெறும்போது, அது அவர்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்தி, வரப்போகிற காரியங்களை காண்பிக்கும் என்று சொல்லியிருந்தார்.

அந்த கருகலான மொழிகளில், அவர் வானத்திலிருந்து இறங்கின அப்பம் என்பது ஒன்றாக இருந்தது. பழங்காலத்தில் வானத்திலிருந்த வந்த மன்னவாக (அப்பமாக) அவர் எப்படி இருந்தார் என்பதை புரிந்துகொள்ளவில்லை. இந்த அப்பத்தை புசிப்பதினால் எப்படி ஜீவனை கொடுக்கும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அந்த காரியங்கள் அவர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத இரகசியங்களாக இருந்தன. இதன் விளைவால் அநேகர் அவரை விட்டு விலகிப்போனார்கள். எப்படி உலகம் முழுவதும் அவரது மாம்சத்தை புசித்து, அவரது இரத்தத்தை பானம் பண்ண முடியும். இது அபத்தமானது என்று கூறினார்கள். ஆகையால் அநேகர் அவருடன் செல்லவில்லை. ஆனால் அப்போஸ்தலர்களும் இன்னும் நூற்றுக்கணக்கான -வர்களும் அவர் மேல் தொடர்ந்து நம்பிக்கை வைத்தார்கள். அவருடைய வார்த்தைகளில் ஆழமான பொருள் இருக்கிறது என்றும் அவரது விநோதமான மார்க்கத்தில் மறைவான காரணங்கள் இருக்கின்றன என்றும் அவர்கள் கூறினார்கள். ஒரு வேளை இயேசு கூறியது போல ஏற்ற காலத்தில் நாம் அறிந்துகொள்ளுவோம். அவர் தேவனுடைய குமாரன் என்பதற்கு அநேக ரூபகாரங்களை நாம் காண்கிறோம். இவைகளில் நாம் இடறலடையக்கூடாது. இப்படியாக அவர்கள் தொடர்ந்து அவரை விசுவாசித்து, தெளிவற்ற காரியங்களை தங்கள் மனதில் வைத்துக்கொண்டார்கள்.

### அவசரமான பேதுருவின் தவறு

மனுஷகுமாரன் எருசலேமுக்கு செல்ல வேண்டும் என்றும் யூதர்கள் அவரை சிலுவையில் அறைவார்கள் என்றும், மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுவார் என்றும் இயேசு அவர்களிடம் கூறியபோது, அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. மேசியாவைப் பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டிருந்த சகல மகிமையான காரியங்களும் அவருக்கு பொருந்தும் என்று அவர் சொல்லியிருந்தார். எப்படி அவர் சிலுவையிலறையப்படக் கூடும்? அதன்படி பேதுரு, என்ன விநோதமான காரியங்களை நீங்கள் பேசுகிறீர்கள் என்று அவரை கடிந்து கொண்டார். இது உங்களுக்கு நடக்கக்கூடாது என்றார். ஆனால் இயேசு அவரிடம் கூறியதாவது: “எனக்கு பின்னாலேப்போ சாத்தானே, நீ எனக்கு

இடறலாயிருக்கிறாய், தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் மனிதனுக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய்.'' (மத்தேயு 16:23)

பேதுரு கண்டனத்தை உணர்ந்து கொண்டு, தான் தவறு பண்ணியிருக்கிறதை அறிந்தார். ஆண்டவருக்கு தீங்கு நடக்கும் என்று நினைத்தார். ஆனால் அவர் சிலுவையில் அறையப்படுவார் என்று நினைக்கவேயில்லை. சில நாட்களுக்கு முன்பு, திரளான ஜனங்கள், ''தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்! உன்னதத்திலே ஓசன்னா'' என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். (மத்தேயு 21:9) எருசலேமில் இலட்சக்கணக்கான அல்லது அதற்கும் மேலான யூதர் அவரை ராஜாவாக வாழ்த்தினார்கள். ஆகையால் பிரதான ஆசாரியர்கள் இயேசுவுக்கு விரோதமாக எதையும் செய்ய தைரியம் இருக்காது என்று அப்போஸ்தலர்கள் நினைத்தார்கள். இப்பொழுது அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தில் பங்குகொண்டிருந்தார்கள். மேலும் அவர் பாடுபடுவதற்கு முன்பு இந்த பஸ்காவை அவர்களுடன் புசிக்க விருப்பங்கொண்டிருந்ததாக இயேசு சொல்லியிருந்தார். எல்லாரும் ஆண்டவரை மறுதலித்தாலும் நான் மறுதலிக்க மாட்டேன் என்று பேதுரு அறிவித்திருந்தார். பேதுரு தனக்குத்தானே சொல்லிக் கொண்டதாவது: நான் அவரை மறுதலிக்கும்படி செய்ய என்ன இருக்கிறது? அப்படிப்பட்ட காரியத்தை செய்ய என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது!

சகலமும் அனுகூலமாக இருந்ததாக சீஷர்கள் நினைத்தார்கள். ராஜ்யத்தில் யார் பெரியவனாக இருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருந்ததை இயேசு கண்டார். ஒருவரது காலை ஒருவர் கழுவுவதைக் குறித்து நினைக்கக்கூடாத அளவுக்கு அவர்கள் இந்த காரியங்களில் மூழ்கியிருந்தார்கள். பிறகு ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் சென்று ஒலிவ மலைக்கு சென்றார்கள். அவர்கள் கெத்செமனே என்னும் தோட்டத்தில் நுழைந்த பிறகு, இயேசு, பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபை அழைத்துச்சென்று கூறியதாவது: ''நான் அங்கே போய் ஜெபம் பண்ணுமளவும் இங்கே விழித்திருங்கள்.'' பிறகு, அவர் அவர்களிடத்தில் திரும்பி வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு அவர் கூறியதாவது: ''நீங்கள் சோதனைக்கும்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.'' அந்த அமைதியான இடத்தில் சோதனைக்குட்படுவோம் என்று அவர்களால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

## கெத்செமனேயில் சோதனையும் வெற்றியும்

கெத்செமனேயில் இயேசு வியாகுலப்பட்டார். அவர் ஏதாவது ஒரு வழியில் பிரமாணத்தை மீறியிருப்போமோ என்று அவர் பயத்தில் இருந்தார். அவர் ஆரம்பித்திருந்த புது வாழ்க்கையில் பிதாவானவரின் முழு தேவைக்கு, அந்த திட்ட அளவிற்கு வராமல் ஏதாவது தவறு பண்ணியிருப்போமோ என்று பயந்தார். அப்படிப்பட்ட நிலைமையில் அவரது முழு மனித ஜீவியமும் தோல்வியடைந்திருக்கும். அவருக்கு மாத்திரமல்ல, மரணத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் உலகத்தை மீட்க அவர் உலகத்தில் வந்ததும் தோல்வியடைந்திருக்கும். தோட்டத்தில் கர்த்தர் தமது சோதனை அனுபவங்களை கடந்தபிறகு, தேவன் அவருக்கு விசேஷித்த உதவியை அனுப்பினார். ஒரு தேவதூதன் வந்து அவருக்கு ஊழியம் செய்தான். இது எப்படிப்பட்ட உதவி என்பதை நாம் அறியோம். ஆனால் நாம் அதை படித்து மறைபொருளை காணுவோமானால், இயேசு தமது பங்கை நிறைவேற்றி முடித்தார், பிதாவின் சித்தத்திற்கு முழுமையாக கீழ்ப்படிந்தார் என்ற உறுதிமொழியை தேவதூதன் கொடுத்தார் என்பதை அறிவோம்.

இந்த உறுதிமொழியை இயேசு பெற்றவுடன், அவர் மிகவும் அமைதியானார். அவர் பிதாவினுடைய தயவை, பிதாவின் ஆசீர்வாதத்தை பெற்றிருந்தால் அவர் எப்படிப்பட்ட அனுபவமாயிருந்தாலும் அதை அவரால் கடந்து செல்ல முடியும்! பிறகு அவர் தமது சீஷர்களிடம் வந்து தாம் ஜெயங்கொண்டதாக அறிவித்தார். அதன்பிறகு அவர் கஷ்டத்தில் இல்லை. அவர் சொல்லியிருந்ததாவது: ''என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது.'' தேவன் அவருக்கு கொடுத்திருந்த உறுதிமொழி மூலம் அவருக்கு இப்போது தைரியம் வந்திருந்தது. அவரைப் பொருத்தவரை இனி விழித்திருந்து ஜெபிக்க வேண்டிய அவசியமிராது.

## சோதனையை எதிர்த்தல் பலத்தை அதிகரிக்கும்

சீஷர்களுக்கு இந்த புத்திமதி அந்த சமயத்தில் விசேஷமாக தேவையானதாக இருந்தது என்பதை நாம் கவனிக்கிறோம். இப்படிப்பட்ட விநோதமான சோதனைகளும் பரீட்சைகளும் அவர்களுக்கு முன்னே இருக்கும் பொழுது, அவர்கள் விழித்திருந்து ஞானத்திற்காகவும் கிருபைக்காகவும் ஜெபித்தால் அவர்களது சோதனைகளில் விழமாட்டார்கள். அப்படி வந்தால், அதை எதிர்க்கும்படியான உதவியை பெற்றிருப்பார்கள். அவர்கள் சோதனைக்குள் விழுந்திருந்தாலும், ஆனால் அதில் நுழைந்திருக்க மாட்டார்கள். ஒரு நாளில் நமக்கு அநேக சோதனைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் நாம் ஒரு சோதனையை எதிர்க்கும்பொழுது, இது இன்னொன்றை எதிர்க்க பலத்தைத் தருகிறது. ஆகையால் அப்போஸ்தலர் யாக்கோபு கூறுகிறதாவது: ''நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.'' (யாக்கோபு 1:2,3) ஆனால் ஒரு சோதனை ஒருவனுக்கு வரும் போது, அதில் விழும்போது, அதில் நுழையும் போது, யாரும் அதை சந்தோஷமாக எண்ணுவதில்லை.

பரிசுத்த பேதுரு அவரது ஆண்டவரை மறுதலித்ததை வருத்தமில்லாமல் நினைவுகூரவில்லை. இயேசு தீர்ப்பாயத்திற்கு முன்னே நிறுத்தப்பட்டிருந்த போது, பேதுரு வழிநடத்துதலுக்காக விழித்திருந்து ஜெபித்திருந்தால், அவரது கர்த்தரை மறுதலிக்கும்படி நினைத்திருக்க மாட்டார். சோதனை வந்த போது அவர் பலமுடையவராயிருந்து, நான் கர்த்தரை மறுதலிக்க மாட்டேன் என்று கூறியிருப்பார்! என் பங்கில் நான் அவருடன் இருப்பேன்! அதன் பிறகு அவர் அது ஒரு கடினமான இடமாக இருந்தது என்று நான் சொல்லுகிறேன்! நான் சோதனையில் விழுந்தேன். எனினும் நான் அந்த பயங்கரமான நேரத்தில் ஜெயங்கொண்டவனாக வர முடிந்தது!

ஆனால் சாத்தான் அவரை பிடித்து சலிக்க விரும்பினான். பேதுரு அவரை மறுதலித்த பிறகு. நான் அவரை பின்பற்ற மாட்டேன், அவரை முற்றிலுமாக விட்டுவிடுவேன் என்று கூறி வெளியே சென்றிருந்தால் அவர் உண்மையிலேயே எல்லாவற்றையும் இழந்திருப்பார். ஆனால் அவர் சோதனைக்குள் விழுந்தாலும், முடிவாக அவர் ஜெயங்கொண்டார். அது சேவல் கூவும் நேரமாக இருந்தது. சேவல் கூவுவதைக் கேட்டு அவர், சேவல் கூவும் முன்னே மூன்று தடவை என்னை மறுதலிப்பாய் என்று இயேசு சொன்னது இதுதான் என்று தனக்குள்ளே கூறிக்கொண்டார். ஆகையால் பேதுரு வெளியே சென்று மனங்கசந்து

அழுதார். அவர் ஜெபத்துடனும் அழுகையுடனும் தேவனிடம் சென்றார். மறுபடியும் அவர் நல்ல வழியில் தொடர ஆரம்பித்தார். ஆகையால் நாம் சோதனையில் அகப்படுவது முற்றிலுமாக நாம் தோல்வியடைவது அல்ல. ஆனால் நாம் அதிகமாக சோதனையை எதிர்த்தால், நம்மை அது ஜெயங்கொள்ள அனுமதிக்காதிருந்தால், நாம் பலமான குணலட்சணமுள்ளவர்களாவோம்.

### இப்பொழுது நமது தலைப்பு வசனம் ஒரு விசேஷித்த அர்த்தத்தில் பொருந்துகிறது

இந்த வசனத்துடன் இணைந்த சீஷர்களின் அனுபவங்கள், பரந்த பொருளில் சுவிசேஷ யுகத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் பொருந்தும்; ஆனால் விசேஷமாக தற்காலத்தில் உள்ளவர்களுக்கு மிகவும் பொருந்தும். சபையானது மிகவும் எச்சரிக்கையாகவும் கவனத்துடனும் இருந்து, உலகம், மாம்சம் மற்றும் சத்துருவின் தந்திரங்களுக்கு எதிராக தம்மை பலப்படுத்திக் கொள்ளுவதற்கான நேரம் இது. லாங்பெல்லோ என்ற கவிஞரின் வார்த்தைகளாவன:

"நடத்தப்படுகிற கால்நடைகளைப் போல ஊமையாயிராதே;

போராட்டத்தில் ஒரு வீரனாக இரு!"

நாம் கர்த்தருடைய சேனையில் இருந்து நடத்தப்படுகிற கால்நடைகளைப் போல இருக்கலாம். ஆனால் நாம் அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். கர்த்தர் அவரது திட்டத்தின் புரிந்து கொள்ளுதலை நமக்கு கொடுத்திருக்கிறார். இதில் நாம் தற்காலத்தில் அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அனுகூலத்தைப் பெற்றிருக்கிறோம். ஏனெனில் அவர்கள் அதுவரை யுகங்களின் மாபெரும் திட்டத்தையும் சபையின் பாடுகளின் முக்கியத்துவத்தையும் அறியாதிருந்தார்கள். இந்த வழியில் நாம் அதிகமான அனுகூலங்களை பெற்றிருக்கிறோம். இயேசு தம்மைக்குறித்து அவர்களிடம் விளக்கியிருந்தார். "இப்படியாக மனுஷகுமாரன் பாடுபட்டு அவரது மகிமைக்குள் பிரவேசிக்க வேண்டும் என்று அது தகுதிபடுத்தியது." வேத வாக்கியங்களை அவர்கள் புரிந்துகொள்ளுகிற அளவுக்கு அவர் திறந்திருந்தார். அவர் பாடுபட வேண்டிய அவசியத்தை குறிப்பிட்டிருந்தார். அவர்களால் இன்னும் தெளிவாக புரிந்து கொள்ள முடியவில்லை. கர்த்தருடைய திட்டம் என்ன என்பதை அறிந்து கொள்ளுகிற அளவுக்கு நமக்கு அனுகூலம் இருக்கிறது. ஆகையால் நமது கர்த்தரின் வார்த்தைகள் அதன் பிரயோகத்தில் ஆதிகால சபையைக் காட்டிலும் நமக்கு மிகவும் ஆற்றல் வாய்ந்ததாக இருக்கின்றன.

நாம் விழிப்பாக, சுறுசுறுப்பாக, எச்சரிக்கையாக தேவனுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் உடன் ஊழியராக இருப்போமாக. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற மாபெரும் பரம அழைப்பை, சகல சிருஷ்டிகளிலும் மிகவும் ஆச்சரியமானதை நாம் கவனிக்க வேண்டும். நீதிக்கான நமது வைராக்கியத்தையும் ஆவியின் ஆர்வத்தையும் தேவன் மற்றும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் காண்பிக்க நமக்கு வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. தற்போதைய சந்தர்ப்பம் மிகவும் விசேஷித்த ஒன்றாக இருக்கிறது. தேவனோடு இசைந்திருக்கிறவர்கள் அனைவரும் கிருபையிலும் அறிவிலும் வளரவும், இப்படியாக நமது ஊழியத்தில் புத்திசாலியாக இருக்கவும் அவர் சாத்தியப்படுத்தியிருக்கிறார். நாம் அந்த புத்திசாலித்தனத்துடன் நல்லிணக்கத்தில் ஜெபிக்க வேண்டும்.

எந்த வகையான சோதனைகள் நமக்கு வரும் என்பதை நாம் முன்கூட்டியே தெளிவாக உணர்ந்துகொள்ள முடியாது. ஏனெனில் அவைகளைப் பற்றி முன்னரே அறிந்தகொள்ள முடிந்தால் அவைகள் இலகுவானதாகவும் சுலபமாக ஜெயங்கொள்ளக் –கூடியதாகவும் இருக்கும். ஆகையால் விழித்திருந்து எப்பொழுதும் ஜெபியுங்கள். எப்பொழுதும் தயாராயிருப்பதே பாதுகாப்பான ஒரே வழி. ஏனெனில் நமது எதிராளியாகிய சாத்தான் எவனை விழுங்கலாமோவென்று தேடுகிறான். நமது பலவீனம் என்ன என்பதை நம்மைக்காட்டிலும் அவன் அறிந்திருக்கிறான். அதை அவன் பயன்படுத்திக்கொள்ள எப்பொழுதும் தயாராயிருப்பான். நாம் ஜெயங்கொள்ளுகிறவர் –களாயிருக்க நமது இருதயத்தில் கர்த்தருடைய ஆவியும், "ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையும்" தேவைப்படுகிறது. நமது அனுதின சுய அறிவுரையாக இருக்க வேண்டியது:

"எனது ஆத்துமா உமது பாதுகாப்பில் இருக்கட்டும்

பதினாயிரம் எதிரிகள் எழும்புகிறார்கள்;

பாவத்தின் சேனைகள் பலமாக அழுத்துகின்றன

பரிசிலிருந்து உன்னை இழுப்பதற்கு."

R5329

## GOOD COURAGE REQUIRED FOR OVERCOMING

# ஜெயங்கொள்ள நல்ல தைரியம் தேவை

"கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்."–சங்கீதம் 31:24

வேத வாக்கியங்களானது கர்த்தருடைய ஜனங்கள் முழுவதும் விசுவாசம், நம்பிக்கை, எதிர்பார்ப்பு உடையவர்களாக இருக்க வேண்டும் என்று ஊக்குவிக்கிறது. நாம் உலகத்திற்குள் பார்ப்பதால் ஏன் இப்படி இருக்க வேண்டும் என்பதற்கான குறிப்பிட்ட காரணங்களை நாம் பார்க்கிறோம். உலகத்தில் பெரும்பாலானவர்கள் பயம், திகில், அவநம்பிக்கை மற்றும் கவலை நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணத்தால் அவர்கள் பெற்றிருக்கிற சந்தர்ப்பங்களில் சிறந்ததை பெற தவறுகிறார்கள். அவர்கள் வெவ்வேறு திசைகளில் பாவத்தின் ஆபத்துகள் மற்றும் தொந்திரவுகளை அறிவார்கள். ஆகையால் பயத்திலும் நம்பிக்கையில்லாமலும் இருப்பதற்கான காரணங்களை பெறுகிறார்கள்.

ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் அவருடனும், அவர் இவர்களுடனும் விசேஷித்த உறவுக்குள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அனுபவம் இல்லாததாலும் அவருடன் உறவு இல்லாதிருந்ததாலும், அவர்களது காரியங்களில் அவரது மேற்பார்வை இருக்கும் என்ற உறுதிமொழியை அவர் கொடுத்திருக்கிறார். ஆகையால் கர்த்தரிடத்தில் நம்பிக்கையும் எதிர்பார்ப்பையும் வைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர் சொல்லியிருக்கிறவைகளை அவர்கள் கவனிக்க வேண்டும். அவர்களுடைய காரியங்கள் அவரது மேற்பார்வையில் இருக்கின்றன என்ற எண்ணத்தில் தைரியம் கொள்ள வேண்டும்.

தேவனுடைய ஜனங்கள் பாவத்திற்கும் சத்துருவுக்கும்

எதிராக உலகத்திலிருந்து வெளியே வந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பள்ளியில் நீதி, சத்தியம் மற்றும் பரிசுத்தத்தின் பள்ளியில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வல்லமையுள்ள சத்துருக்களால் சுற்றிக்கொள்ளப்படுவார்கள். சாத்தானே அவர்களுக்கு எதிராக அணிவகுப்பான். தேவனுடைய திட்டங்கள் அனைத்தையும் அவன் எதிர்ப்பதால், அவர்களை எதிர்க்க அவன் நாடுவான். கர்த்தர் மேல் அவனால் நேரடியாக தாக்க முடியாது. ஆனால் அவரது திட்டத்தையும் தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவர்களையும் அவன் தாக்கக்கூடும். கர்த்தருடைய நாளில் கலவரம், குழப்பங்கள் மற்றும் துன்பங்கள் ஆகியவற்றை தூண்டுகிறவன் அவன்தான். அதைத்தொடர்ந்து கர்த்தருடைய பிள்ளைகளை துன்புறுத்த தூண்டினான்.

சாத்தான் இவைகளை தனது சொந்த தொடுதலினால் செய்யாமல், அவனால் ஏமாற்றப்பட்ட ஊழியர்கள் மூலமாக செய்கிறான். அவன் எப்பொழுதும் நீதியையும், நீதியை சிநேகிக்கிறவர்கள் அனைவரையும் எதிர்க்கிறவனாக இருக்கிறான். இதனிமித்தம் தேவனுடைய பிள்ளைகளுக்கு மகா தைரியம் தேவைப்படுகிறது. ஏனெனில் சத்துருவானவன் அவர்களது தைரியத்தை அடித்து குறைக்க அனுமதித்தால், சீக்கிரத்தில் அவர்களை போரிலிருந்து முற்றிலுமாக வெளியேற்றி விடுவான். பின்வாங்குகிற போர்வீரன், போருக்கு போகாத போர் வீரனைக்காட்டிலும் பிரயோஜனமில்லாதவன். தைரியத்தை இழப்பதற்கு பதிலாக, நமது பூமிக்குரிய உரிமைகளை தேவனிடம் ஒப்புக்கொடுத்து, பூமிக்குரிய காரியங்களில் அவர் நம்மை வழிநடத்துவார் என்றும் "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு" சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக ரத்து செய்வார் என்றும் நம்ப வேண்டும்.

சத்துருவைத் தவிர, உலகத்தின் பொதுவான ஆவி நம்மை எதிர்க்க இருக்கிறது. நமக்கு தேவனுடைய விசேஷித்த மேற்பார்வை இருக்கிறது மற்றும் தேவன் நம்மை நேசிக்கிறார் என்று நாம் எண்ணுவதை உலகம் நம்மை முட்டாள்தனமாக எண்ணுகிறார்கள். தேவன் சர்வ உலகங்களையும் ஆயிரக்கணக்கான தேவதூதர்கள் முதலானவைகளை உண்டாக்கியிருக்கிறார். அவர் உங்கள் மேல் தனி அக்கறை கொண்டிருப்பார் என்று நீங்கள் கற்பனை பண்ணுகிறீர்களா? தேவன் என்று ஒருவர் இருந்தால் அவர் மிகவும் பெரியவராயிருந்து, நாம் மிகவும் சிறியவர்களாயிருப்பதினால் நம்மை அவர் கவனிக்கமாட்டார் என்று நம்மிடம் கூறுகிறார்கள். இப்படியாக அவர்கள் நமது விசுவாசத்தை தாழ்த்தக்கூடும். இது சொல்லப்படாமல் இருந்தால்கூட இதுவே உலகத்தின் உணர்வாக இருக்கிறது. நாம் உலகத்தாரிடம் தொடர்புகொள்ள வரும்போதெல்லாம், ஒரு வார்த்தை கூட நம்மிடம் பேசாமல் இருந்தும் ஒரு ஈரமான போர்வையை நமது எளிமையான நம்பிக்கையின் மீது எறிகிறார்கள். நமது தலைப்பு வசனம் கூறுவது போல, நாம் நல்ல தைரியமும் கர்த்தரிடம் நம்பிக்கையும் பெற்றிருக்க வேண்டும்.

மேலும் நாம் நமது சொந்த மாம்சத்தையும் பெற்றிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் ஒரு சத்துருவை நமது சரீரத்திலேயே பெற்றிருக்கிறோம். நாம் நம்மை கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்த போது, அவர் நமக்கு பரிசுத்த ஆவியை கொடுத்த போது, நாம் ஒரு மாறுதலை அடைந்து ஆவியின் ஜீவியின் ஒரு கருவாக ஆகிறோம். அந்தக்கரு, அழிவுக்குரிய இந்த சரீரத்தில் உயிர்த்தெழுதல் வரை அபிவிருத்தி அடையும். அப்பொழுது நாம் மாம்சீக சுபாவத்திலிருந்து பரலோக நிலைமைக்கு செல்வோம். "அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." (1கொரிந்தியர் 15:42-44)

நாம் மாம்சத்தில் இருக்கும் போது, நாம் மாம்சத்தின் எல்லா இயக்கங்களையும் பெற்றிருக்கிறோம். இவைகளையெல்லாம் புது சிருஷ்டியாக கைவிட்டிருக்கிறோம். பாவத்தை விட்டு திரும்பியிருக்கிறோம். நாம் பரலோகத்திற்குரிய அக்கறைகள் மற்றும் நம்பிக்கைகளுக்காக பூமிக்குரிய அக்கறைகளையும் நம்பிக்கைகளையும் மாற்றியிருக்கிறோம். நம்முடைய அனுதின அனுபவங்களில் கர்த்தர் நம்மை சோதிக்கிறார். மாம்சத்தை ஜெயங்கொள்ள நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பாவ சுபாவங்களை போரிட்டு ஜெயங்கொள்ள அதிக அளவில் தைரியம் தேவைப்படுகிறது. மாம்சத்தின் பலவீனங்கள் மற்றும் குறைகளோடும் போரிட்டு ஜெயங்கொள்ள இன்னும் அதிகமான தைரியம் தேவைப்படுகிறது. மாம்சீக சரீரத்தை பலியிடவும் பூமிக்குரிய காரியங்களை விட்டுவிடவும் கர்த்தருக்கு ஊழியம் பண்ணவும் இன்னும் வல்லமை தேவைப்படுகிறது. இன்னும் அதிகமான தைரியம் தேவைப்படுவதால் நாமே போதுமானவர்களாக இல்லை.

## பலவகையான தைரியம்

கர்த்தரில் நாம் நம்பிக்கை வைக்கும்படி நாம் அறிவுறுத்தப்படுகிறோம். "என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு." (பிலிப்பியர் 4:13) என்று நாம் உறுதியளிக்கிறோம். அவரது பெலன் நமக்கு போதும். போரில் பயன்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கக்கூடிய, வெற்றிகரமாக ஆக்கக்கூடிய நமது அனைத்து தைரியமும் தேவைப்படுகிறது. ஆனால் நாம் ஜெயங்கொள்ளும்படி போதுமான கிருபையை கர்த்தர் நமக்கு அருளுகிறார். ஒருவர் பூரண வாழ்க்கையை வாழமுடியும் என்று இதற்கு பொருளல்ல. இந்த நல்ல தைரியத்தை அவர் முழுமையாக பயன்படுத்தாமல் இருக்கலாம். அவர் அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சம் தோல்வியடையலாம். ஆனால் நமது கர்த்தர் நம்மை வழிநடத்திக்கொண்டு வருகிறார். நமது தோல்விகளிலிருந்து முக்கியமான பாடங்கள் கற்றுக்கொள்கிறோம்.

சிலர் பலமான விசுவாசத்தையும் நம்பிக்கையும் பெற்றதிலிருந்து. தங்களது மனதை கர்த்தரில் முழுமையாக மையப்படுத்தி தைரியத்துடன் முன்னேறியிருக்கிறார்கள். இது பலமான தைரியம், சரியான தைரியம் என்ற அர்த்தத்தில் நல்ல தைரியம் என்று அழைக்கப்படுகிறது. கர்த்தரில் இந்த நம்பிக்கை ஒரு நல்ல தைரியத்தினால், ஒரு நல்ல வகையான தைரியத்தினால், ஒரு தெய்வ பக்தியுள்ள தைரியத்தினால் ஆதரிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் நமது தலைப்பு வசனத்துடன் இணையலாம்.

பெருமையுடன் பிறந்த தைரியம் இருக்கலாம். அது

இப்படியாக கூறலாம்: பின் வாங்க வேண்டாம். யாரும் உன்னை முந்த விடாதே. ஒரு போராட்டத்தில் வீரர்கள் ஒருவரோடொருவர் போராடுவார்கள். கவனத்தை கவரும் படி எதையாவது செய்ய விரும்புவார்கள். அது மற்றவர்களது பாராட்டுதலைப் பெறும். அவர்களுக்கு ஊக்கமளிக்க ஏதாவது தேவைப்படுகிறது. தேசத்தின் மேல் உள்ள பிரியத்தினால், புகழின் விரும்பத்தினால், இசை முதலானவை தேவைப்படுகிறது. தங்கள் ஜீவனைக் கொடுப்பதற்கோ அல்லது மற்றவர்களின் ஜீவனை எடுப்பதற்கோ ஓடுவதற்கு அவர்களை தைரியப்படுத்த இவைகள் தேவைப்படுகின்றன. இந்த வகையான தைரியம், தைரியத்தை ஊக்குவிக்க அது தகுதியற்ற நோக்கமாக இருந்தாலும், போரில் ஜெயங்கொள்ள உதவிகரமாக இருக்கும்.

ஆனால் கர்த்தரிடத்தில் விசுவாசத்தின் அடிப்படையில், நல்ல கொள்கைகளிலிருந்து வரும் தைரியமானது, தற்பெருமைக்குரியதாய் இராமல் மேன்மையானதாக, தேவனுக்கு பிரியமானதாக இருக்கும். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். தேவன் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய ராஜ்யத்தில் அவரது குமாரனுடன் நாம் உடன் சுதந்தரராக விரும்புகிறார் என்ற உணர்வின் அடிப்படையில் இது வந்தது. நாம் விசுவாசத்தை நிரூபிப்போமா என்று பார்க்க அவர் நம்மை சோதித்துக்கொண்டிருக்கிறார். நம்முடன் இருக்கும் இந்த தைரியமானது காரியங்களை சரியான வழியில் செய்ய வேண்டும்.

## அறிவுரையானது எல்லா நிலைகளுக்கும் பொருந்தும்

நாம் ஒரு ஸ்தானத்திலோ அல்லது இன்னொரு ஸ்தானத்திலோ இருந்தாலும், இந்த அறிவுரையானது வாழ்க்கையில் எல்லாவற்றிலும் நம்மை பாதிக்கிறது. அரியணையில் இருக்கும் ராஜாவுக்கும் பொருந்தும். அதாவது கர்த்தருடைய சித்தம் என்று புரிந்துகொள்ளப்பட்ட நல்ல காரியங்களை செய்ய அவன் நல்ல தைரியமுள்ளவனாக இருக்க வேண்டும். உனக்கான கர்த்தருடைய சித்தம் எதுவாக இருந்தாலும், உன் கடமையை செய் என்று அப்படிப்பட்ட தைரியம் நமக்கு சொல்லும். உன்னுடைய நோக்கம் தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டாலும், கர்த்தரில் நம்பிக்கையாயிரு. சரியான காரியத்திற்காக நாம் நிற்பதற்கு நல்ல தைரியம் நமக்கு தேவைப்படுகிறது. அதற்கான பரிசு இந்த வாழ்க்கையிலோ அல்லது வரக்கூடிய வாழ்க்கையிலோ இருக்கலாம்.

இந்த அறிவுரை வணிகம் செய்யும் ஒரு கிறிஸ்தவனுக்கும் பொருந்தும். அவனது உலகப்பிரகாரமான நண்பர்கள் கூறலாம்: உன் வியாபாரத்தில் நீ தோற்று போவாய். உன் வியாபாரத்தை விளம்பரப்படுத்த முடியாது. நீ உண்மையை சொன்னால், ஜனங்கள் உன்னை ஆதரிக்கமாட்டார்கள். ஜனங்கள் அதிகமாக பொய்கள் சொல்லுகிற இடத்திற்குத்தான் செல்வார்கள். அவன் அவர்களது புத்திமதியை எடுத்துக்கொண்டால் அவன் ஒரு பெரிய வியாபாரத்தைப் பண்ணுவான். ஆனால் வாழ்க்கையின் முக்கிய காரியததை இழப்பான், மாபெரும் பரிசை அவன் இழப்பான்.

வேலை செய்கிறவர்களுக்கும் இது பொருந்தும். அவர்கள் நல்ல கொள்கைகளை பேசுவார்கள். அவர்கள் உண்மையைச் சொல்ல பயமுள்ளவர்களாகவோ, தைரியமில்லாதவர்களாகவோ இருக்கமாட்டார்கள். இது, அவன் சண்டையிடும் குணமுள்ளவர்களாகவோ, ஒவ்வொரு பிரச்சனையிலும் மற்றவர்களிலிருந்து வெவ்வேறான கண்ணோட்டத்தை உடையவனாகவோ இருப்பான் என்று பொருள்படாது. ஞானத்தினால் விளைந்த ஒவ்வொரு விஷயத்தையும் ஒப்புக்கொள்ளுவான். அது ஒரு கொள்கைக்கு மாறானதாக இருந்தால், அவன் தன் நிலையை எடுத்துக்கொண்டு, இதுதான் என்னுடைய நிலைப்பாடு, என்னுடைய நிலையை பராமரிக்க கடமைப்பட்டுள்ளேன் என்று கூற வேண்டும். எனினும் உங்கள் மனசாட்சியின்படி நீங்கள் செய்ய கடமைப்பட்டுள்ளீர்கள் என்பதை நான் அங்கீகரிக்கிறேன். என் கடமை என்று உணருவதை நான் செய்வதில் திருப்தியடைகிறேன். உங்களை கட்டாயப்படுத்த விரும்பவில்லை. ஆனால் எப்படியாவது எனது கொள்கைகளுக்கு உண்மையாயிருப்பேன். நீங்கள் என்னை தவறாக புரிந்துகொள்ளமாட்டீர்கள் என்றும், நான் உங்களை எதிர்த்து காரியத்தை என் வழிக்கு திருப்ப முயற்சிப்பேன் என்று நினைக்கமாட்டீர்கள் என்றும் நான் நம்புகிறேன். நான் என் உரிமைகளையும் மனசாட்சியையும் பெற்றிருக்கிறேன். நீங்களும் உங்களுடையதை பெற்றிருக்கிறீர்கள். நான் எனது தீர்மானத்தின்படியும் மனசாட்சியின்படியும் செய்ய வேண்டும் என்பதை உங்களுக்கு சும்மா சொல்லுகிறேன். உங்கள் தீர்மானத்தின்படியும் மனசாட்சியின்படியும் செய்ய வேண்டும்.

இப்படியாக வேறுவிதமாக நினைப்பவர்கள், தங்களிடம் பேசுகிறவர்கள், இவர்கள் நல்ல தைரியம் உடையவர்கள் என்று நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதை அறிவார்கள். இது வாழ்க்கையில் எளிமையான, தினக்கூலி, துணி வெளுக்கும் பெண் போன்ற யாருக்கும் பொருந்தும்.

## விசுவாசத்தின் அளவுக்குத்தக்கதாக தைரியம்

பெரியவர்களோ, சிறியவர்களோ அனைவருக்கும் வாழ்க்கையில் சோதனைகளும் துன்பங்களும் உண்டு. நல்ல விதமான தைரியம் உடைய தேவனுடைய பிள்ளைகள் அதைக்கையாளும் சந்தர்ப்பத்தை காண்பார்கள். இப்படிப்பட்டவர்களைத்தான் தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். ஜெயங்கொள்ளுகிறவர் -களிடத்தில் காணப்படக்கூடிய தைரியத்தை உடையவர்களைத்தான் அவர் தேடிக்கொண்டிருக்கிறார். ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மட்டுமே ராஜ்யத்தில் ஒரு இடம் கொடுக்கப்படும். நல்ல தைரியத்தை பெற்றிராதவர்கள் ராஜ்யத்தில் இடம் பெறவே மாட்டார்கள். நமது தலைப்பு வசனத்தின் பாடமே, திடமனதாயிருங்கள் என்பதாகும். ஏனெனில் இந்த வழியில் தான் கர்த்தரிடத்தில் நமது விசுவாசத்தை மெய்ப்பித்துக் காட்டுவோம். கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்து அவருக்கு உண்மையாக இருப்பவர்கள் அவர்களது உண்மைத் தன்மை மற்றும் விசுவாசத்தின் அளவுக்குத் தக்கதாக தைரியம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இந்த வகையான தைரியம் எல்லா சூழ்நிலைகளிலும் நம்முடன் நிற்கும். உதாரணத்திற்கு, ஒரு சமயத்தில் நமது கர்த்தர் தமது சீஷர்களிடம் பேசும் போது கூறினதாவது: "என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும். ராஜாக்களுக்கும் முன்பாகவும் கொண்டு போகப்படுவீர்கள்..... எப்படிப்பேசுவோம் என்றும் என்னத்தை பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்." (மத்தேயு 10:18,19) கர்த்தருடைய பிள்ளைகள், எப்படிப்பட்ட சூழ்நிலைகள் எழும்பினாலும், தேவனுடைய வல்லமையை சார்ந்து, தேவனில் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து தைரியத்துடன் தங்களை நடத்திக்கொள்வார்கள். கிரேக்க வசனம் இந்த கருத்தை இங்கே கொடுக்கிறது: நீங்கள் ராஜாக்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்னே கொண்டு வரப்படும் போது கவலைப்படாதிருங்கள்.

தேவன் நமக்கு கொடுக்கும் வாய் மற்றும் ஞானம் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுபடும். ஒருவேளை மற்றவர்களிடமிருந்து யோசனைகள் வரலாம்; யாராவது ஒருவரிடமிருந்து வருகிற சாட்சியத்தை கேட்பது மூலம் வரலாம். அல்லது நமது மனதிற்கு வரக்கூடிய வேதவாக்கியம் நமக்கு விசேஷமாக உதவிகரமாக இருக்கலாம். நமது நம்பிக்கை கர்த்தரிலும், நாம் பயப்படாமலும் நடுங்காமலும் இருக்க வேண்டும்.

நமது கர்த்தர் இந்த வார்த்தைகளை அறியாமையில் உள்ள மற்றும் படிப்பறிவு இல்லாத தம்முடைய சீஷர்களை நோக்கி கூறுகிறார். அவர்கள் ராஜாக்கள் மற்றும் நியாயதிபதிகளின் முன்பாக கொண்டு வரப்படும் போது இயற்கையாக பயம் வரும். அவர்கள் என்ன சொல்லுவார்கள்? இந்த மாமனிதர்கள், படித்தவர்கள் கேள்வி கேட்கும் போது எப்படி பதிலளிப்பார்கள்! அவர்கள் தாழ்மையானவர்களாகவும் தங்களது அறியாமையை உணர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் கர்த்தர் அவர்களை வழி நடத்தினார். தற்காலத்தைக் காட்டிலும் அப்போது கல்வி மிகவும் குறைவாக இருந்தது. இன்றைக்கு ஓரளவுக்கு எல்லோரும் படித்தவர்களாக இருக்கின்றனர். ஆகையால் கர்த்தருடைய உறுதிமொழி சீஷர்கள் வாழ்ந்த அந்தக் காலத்தைக் காட்டிலும் நமக்கு இன்றைக்கு குறைவாகவே இருக்கும்.

ஆனால் எந்த விதமான சங்கடத்திலோ அல்லது துன்பத்திலோ இருக்கும்போது நமக்கு உறுதியளிக்கிற இந்த வசனங்கள் நமக்கு ஞாபகத்திற்கு வரவேண்டும். “கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.” (சங்கீதம் 34:7) இந்த எண்ணம் அவருடனான நெருங்கிய உறவை உணரவும், நம்பிக்கையை கொடுக்கும் என்ற உறுதியுடன், நம்மை குளிரச்செய்து தைரியத்துடன் நம்மை நடத்தச் செய்யும். மேலும் நம்மைப்பற்றிய தேவனுடைய நோக்கம் என்ன என்பதை அறியும் அளவுக்கு நாம் ஞானமுள்ளவர்கள் அல்ல என்பதை நாம் உணருகிறோம். ஆகையால் கர்த்தர் இந்த அல்லது அந்த நிகழ்வை எப்படி விரும்புவார் என்பதை நாம் அறியோம்.

**“விசுவாசமானது உறுதியாக அவரை நம்பும்”**

ஆதிகால சீஷர்கள், இயேசுவையும் அவர் அவர்களுக்கு சொன்னவைகளையும் நினைத்து அவர்கள் கொண்டிருந்த எண்ணமாவது: இயேசு நிச்சயமாக ஒரு நல்ல மனிதர். அவர் விரும்பும்படி எந்த பேரழிவையும் தேவன் அனுமதிக்க மாட்டார். இயேசு தாமே காரியங்களை கணித்தார் என்று அவர்கள் யோசித்தனர். பேதுரு அவரிடம் கூறியதாவது: “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து!” (மத்தேயு 16:16) தேவன் எப்படி அவருக்கு தீங்கை அனுமதிப்பார் என்று எண்ணினார்கள். ஆகையால் சீஷர்கள், “என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணுங்கள்” என்று அவர் சொன்னது போல, அது உருவகமாக சொல்லப்பட்டவை என்று முடிவு செய்தார்கள். ஆகையால் மனுஷகுமாரன் சிலுவையிலறையப்படுவார் என்று அவர் சொன்ன பொழுது, அவர் பேசிய புரிந்துகொள்ள முடியாத விநோதமான பேச்சுகளில் இதுவும் ஒன்று என்று நினைத்தார்கள்.

அவர் கைது செய்யப்பட்டு, யூத சனகரின் (ஆலோசனை சங்கம்) முன்னே கொண்டு செல்லப்பட்ட போது, அவர் தமது வல்லமையும் நாவன்மையும் பயன்படுத்துவதற்கு பதிலாக ஊமையாக இருந்து அவருக்கு முரணாக பேசவும் தீங்கு விளைவிக்கவும் அனுமதித்த போது அவர்கள் மிகவும் குழம்பி, ஆச்சரியப்பட்டு, பிரமித்தார்கள். பிறகு அவர் பிலாத்துவிடம் கொண்டு செல்லப்பட்டார். அப்பொழுது சீஷர்கள், இயேசு பிலாத்துவுக்கு முன் நிச்சயமாக தயங்கமாட்டார் என்று நினைத்தார்கள்! ஆனால் காரியங்கள் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக நடப்பதை பார்த்து சீஷர்கள் ஆச்சரியமடைந்தார்கள். ஆனால் இப்படிப்பட்ட காரியம் தேவனுடைய திட்டப்படி இயேசுவினிடத்தில் நடப்பது அவசியமாயிருந்தது. அவர் பாடுபட்டு, பிறகு மகிமைக்குள் நுழைய வேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல உலகத்திற்காகவும் அவசியமாயிருந்தது. ஏனெனில் மீட்பின் விலைக்கிரயத்தை கொடுத்து அது நீதியின் கரங்களில் வைக்கப்பட வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் பூமிக்குரிய விதத்தில் விசேஷமாக பாதுகாக்கப்படமாட்டார்கள் என்று கர்த்தர் அறிவித்திருப்பதை நாம் காண்கிறோம். அவருடைய ஞானத்தில், நமது ஆண்டவருக்கு நடந்தது போல, நாம் காயப்படுவதும் அவமானப்படுவதும் சிறந்ததாக இருக்கிறது. நாம் தைரியமாக இருக்க வேண்டும். அவர் நமது இருதயத்தை பலப்படுத்துவார். ஏனெனில் நாம் அவரில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்; அவர் மிகுந்த ஞானமுள்ளவர், பிழை செய்யமாட்டார் என்றும் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும், அதை அனுமதிப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கும் என்று நாம் அறிவோம். பரிசுத்தவான்கள் கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்கள், அவரது கண்ணின் விழிகளைப் போன்றவர்கள் என்பதை நான் உறுதியுடன் அறிவோம். ஆகையால் இப்படியாக சகலமும் நமக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை நாம் அறிவோம்.

ஆகையால் அதிபதி மற்றும் நியாயதிபதிக்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட வகையாக வார்த்தைகள் நமக்கு கொடுக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. உலகத்தனமான கண்டனங்களிலிருந்து நாம் விடுபட வேண்டிய அவசியத்திலில்லை. ஆண்டவரின் இந்த வார்த்தைகள் அவருக்கு மாத்திரமல்ல, அப்போஸ்தலருக்கும் பொருந்தும் என்பதையும், இயேசு தீர்ப்பிடப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் என்பதையும், அப்போஸ்தலர்கள் தீர்ப்பிடப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு, அநேக தடவைகள் அடிகளை பெற்றார்கள் என்பதையும் நாம் நினைவுக்கு கொண்டு வர வேண்டும். கடைசியில் அவர்களில் பெரும்பாலோர் கொல்லப்பட்டார்கள்.

நமக்கான எந்த காரியத்திலும் நமக்கு என்ன நடந்தாலும், அதற்கான காரணத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தாலும் முடியாவிட்டாலும் அது கர்த்தரிடத்திலிருந்து வந்ததாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வழி கரடுமுரடாக இருந்தாலும், நாம் எதிர்பார்த்ததிற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் நாம் விசுவாசமும் நம்பிக்கையும் உடையவர்களாக இருக்க வேண்டும். “கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.” (சங்கீதம் 27:14)

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**